மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children's Voices for Human Rights



source: http://www.thehindu.com/multimedia/dynamic/00837/15_rte_837615f.jpg

# பள்ளிப் பாதையில் ஒரு பயங்கரம்

– உஷினோர் மஜும்தார்

***அது ஒரு அக்னிப் பரிட்சையாக இருக்கலாம். ஆனால், தில்லியின் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடர்பாக அண்மையில் நீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணை நாடு முழுவதற்குமான ஒரு முன்னுதாரணமாக அமையக்கூடும்.***

திருமணமான இளம் தம்பதியர் குழந்தை பெற்றுக்கொள்வார்கள் என்பது பழைய காலமாகிவிட்டது. இப்போதெல்லாம் அவர்கள் குழந்தையை “திட்டமிட்டு உருவாக்குகிறார்கள்” என்பதே உண்மை. இந்த அணுகுமுறை மாற்றத்திற்கு பல சமூகப் பண்பாட்டுக் காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்கும், படிக்க வைப்பதற்கும் ஆகிற செலவு.

அரசாங்க நிதி உதவியுடன் நடைபெறும் பள்ளிகளில் குறைந்த செலவுதான் ஆகிறது என்றாலும் குழந்தையின் கல்வித்தரத்தில் சமரசம் செய்துகொள்ளாமல் படிக்க வைப்பது என்பது இந்தியாவில் மிகுந்த செலவு பிடிக்கிற ஒரு பிரச்சனையாகத்தான் இருக்கிறது. மழலையர் பள்ளிகளிலேயே இந்த வேதனை தொடங்கிவிடுகிறது. மாணவர் சேர்க்கையைப் பொறுத்தவரையில் பள்ளி நிர்வாகங்கள் தங்களது சொந்த உரிமையாகத்தான் செயல்படுகின்றன. ஆனால், குறிப்பாக இடங்களின் எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறபோது, பெற்றோர் நன்கொடை வழங்க முன்வருவார்களானால் நிர்வாகங்கள் தங்களது இந்த சொந்த உரிமையை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கின்றன.

பெற்றோருக்கு ஒரு ஆறுதலாக இருக்கக்கூடிய வகையில், நல்ல நோக்கத்துடன் தில்லியின் துணை நிலை ஆளுநர், நஜீப் துங், ஒரு நடைமுறைக்கேற்ற நியாயமான ஏற்பாடு ஒன்றை உருவாக்கினார். தலைநகர்ப் பள்ளிகளில் நன்கொடைகள் கொடுத்தாக வேண்டும் என்று நிர்வாகங்கள் வற்புறுத்த ஏதுவாக, நடைமுறைகளில் இருந்த ஓட்டைகளை அடைப்பதற்கு அவர் வழி செய்தார். பெரும் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட மற்ற தொழில்களில் என்ன நடக்கிறதோ அதுவேதான் இதிலும் நடந்தது. பெற்றோருக்கும் தனியார் பள்ளிகளுக்குமிடையே ஒரு நாட்டாமையாக தலையிடுமாறு நீதிமன்றங்கள் இப்போது கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**90**ம் ஆண்டுகளின் நடுக்கட்டத்தில் உயர் கல்விக்கான கட்டணங்கள்தான் பணப் பையைக் கடிப்பதாக இருந்தன. ஆனால், இப்போது கருவுறுவதற்கான செலவுகள் அதிகரித்துவிட்ட நிலையில், அதிகமான குழந்தைகள் பிறக்கிற சூழலில், இந்தியாவில் தரமான தொடக்கப்பள்ளிக் கல்விக்கான செலவு விண்ணை


Source: http://www.thenational.ae/business/economy/cupboard-bare-for-nursery-pupils

முட்டுவதாகிவிட்டது. எண்ணற்ற மழலையர் பள்ளிகள் எங்கும் முளைத்துக்கொண்டிருக்கிற நிலையில் தொடக்கப்பள்ளிக் கல்வி என்பது எல்லை தாண்டி ஒரு வர்த்தக வாய்ப்பாக மாறிவிட்டது.

90ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பெரும்பாலான தனியார் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பது என்பது லட்சக்கணக்கான பணத்தை நன்கொடையாக அல்லது 'கல்விக் கட்டணம்' என்ற பெயரில் வசூலிக்கிற செயலாக மாறிவிட்டது. நன்கொடைச் சுமையிலிருந்து தப்ப வேண்டுமானால் அல்லது அளவுக்கு அதிகமான கல்விக் கட்டணம் செலுத்தாமல் இருக்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழி நீங்கள் சம்பந்தப்பட்ட பள்ளியின் ஒரு முன்னாள் மாணவராக இருக்க வேண்டும் அல்லது பள்ளி நிர்வாகத்தில் யாரையாவது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பள்ளிகள் பழைய மாணவர்களின் மன்றங்களாக மாறி, பள்ளியில் குழந்தைகளை சேர்ப்பதற்கு முன்பாக மூன்று வயது குழந்தைகளையும் அவர்களது பெற்றோர்களையும் சமூக அடிப்படையில் எடை போடுகிற வேலையைத் தொடங்கியிருக்கின்றன. குழந்தைகளையோ அவர்களது காப்பாளர்களையோ இப்படி சமூக ரீதியாக எடை போடுவதற்கு கல்வி உரிமைச் சட்டம் தடை விதிக்கிறது. அவ்வாறு சோதனை செய்வது என்பது, பள்ளி நிர்வாகங்களின் சுயநல நோக்கங்களுக்குப் பொருந்தாத பின்னணிகள் கொண்ட குழந்தைகளுக்கான வாய்ப்புகளைத் தட்டிப் பறிப்பதாகவே இருக்கிறது.

எந்தக் குழந்தைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும், அதற்கு எப்படிப்பட்ட அளவுகோல் இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்வது நிர்வாகங்களின் தனிப்பட்ட அதிகாரமாக இருக்க வேண்டும் என்று கோரி தனியார் பள்ளிகள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சிக்கலான சட்டச் சண்டையை நடத்திக்கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இப்பிரச்சனையில் உச்சநீதிமன்றம் தலையிட்டதைத் தொடர்ந்து பிரச்சனை சிக்கலாக மாறியுள்ளது. தலைநகரில் உள்ள மழலையர் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை ஊடகங்கள் வெளியிட்டபோது பல இதயங்கள் துடிக்க மறந்தன.

தில்லியின் மழலையர் பள்ளி மாணவர் சேர்க்கை தொடர்பான சட்டப் போராட்டத்தின் கதை. 2002ம் ஆண்டில் தொடங்கியது. அப்போது ஒரு குழுவாகச் செயல்பட்ட வழக்கறிஞர்கள் தங்களை 'சமூக நடுவர்கள்' என்று குறிப்பிட்டுக்கொண்டு தில்லி உயர்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தனர். மழலையர் பள்ளிகளின் மாணவர் சேர்க்கையில் நடைபெறும் ஊழல்களை அரசு கண்காணித்துத் தடுக்க வேண்டும் என்பதே அவர்களுடைய கோரிக்கை. 'ஆம் ஆத்மி' கட்சியின் முன்னாள் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் அசோக் அகர்வால் இந்த குழுவினருக்குத் தலைமை தாங்கினார்.

இது கல்வி உரிமைச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன் நடந்ததாகும். அதாவது, இந்தியாவில் கல்வி எப்படி கையாளப்பட வேண்டும் என்பதற்கான ஒரு கோட்பாடு இல்லாத நிலையில் அந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

தில்லி உயர்நீதிமன்றம் அன்றைய மத்திய பள்ளிக் கல்வி வாரிய (சி.பி.எஸ்.இ.) தலைவர் அசோக் கங்குலி தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அந்த குழு சில முக்கிய அம்சங்கள் அடிப்படையிலான ஒரு அமைப்பை ஏற்படுத்த பரிந்துரைத்தது. ஒரு குறிப்பிட்ட பள்ளியில் சம்பந்தப்பட்ட குழந்தை சேர முடியுமா என்பதை முடிவு செய்வதற்கான அமைப்பு அது. "... கல்வி நிறுவனங்கள் 'கற்பிக்கும் கடைகள்' என்று மாறிவிடக்கூடாது; ஏனெனில் அது அனைத்துக் குழந்தைகளுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படுவதை பாதித்துவிடும்" என்று நீதிமன்றம் தனது ஆணையில் குறிப்பிட்டது. உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பால் கலக்கமடைந்த பள்ளிகள் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தன. உச்சநீதிமன்றம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பளிக்க மறுத்துவிட்டது.

2002ம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கல்வி உரிமைச் சட்டம் விண்ணப்பதாரர்களை பள்ளிகள் சோதனைகளுக்கு உட்படுத்தக்கூடாது என்பதை கட்டாயமாக்கியது. ஆனால், சட்டத்தின் இந்தப் பிரிவை எதிர்க்கிற 'சமூக நடுவர்கள்', மழலையர் பள்ளிகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு இது பொருந்தாது எனக்கூறி வழக்குத் தொடுத்தனர். பள்ளி வளாகத்தை சுற்றியுள்ள பகுதியில் வசிக்கக்கூடிய குழந்தைகள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்த பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்ற ஆலோசனையை குழுவினர் கூறினர். அருகில் உள்ள பகுதிகள் எவை என்று அரசாங்கம் முடிவு செய்யலாம் என்றும் அவர்கள் கூறினர்.

2013ல் உயர்நீதிமன்றம், மழலையர் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் கல்வி உரிமைச் சட்டம் பொருந்தாது என்று தீர்ப்பளித்தது. துணை நிலை ஆளுநரை அணுகுமாறு அகர்வாலுக்கு நீதிமன்றம் ஆலோசனை கூறியது. 2013 டிசம்பரில் துணை நிலை ஆளுநர், தொடக்க பள்ளிக்கு முந்தைய வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தொடர்பாக ஒரு சட்டத்திருத்தத்தை அறிவிக்கையாக வெளியிட்டார். அது பள்ளி நிர்வாகங்களுக்கும் தங்களது குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க விரும்பும் பெற்றோருக்கும் இடையேயான சட்டப் போராட்டத்திற்கு இட்டுச் சென்றது.

பள்ளிகளின் நிர்வாக ஒதுக்கீட்டில் கை வைத்த துணை நிலை ஆளுநர், 25 சதவீத இடங்களை, கல்வி உரிமைச் சட்டத்தின்படி, பொருளாதார ரீதியாக நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று ஆணையிட்டார். இது நிர்வாகங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. பள்ளி ஊழியர்களின்

குழந்தைகளுக்கும் பேரக் குழந்தைகளுக்கும் கூடுதலாக 5 சதவீத இடஒதுக்கீட்டை அவர் அறிவித்தார். 8 கி.மீ. சுற்றளவில் உள்ள பெண் குழந்தைகளிடையே இருந்து, குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவதன் அடிப்படையில், இருபாலர் பள்ளிகளில் பெண் குழந்தைகளுக்கு 5 சதவீத இடஒதுக்கீடு வழங்கவும் அவர் ஆணையிட்டார். மீதியுள்ள 65 சதவீத இடங்கள் பொதுப் பிரிவுக்கானவை என்று அறிவித்தார். மீதியுள்ள இடங்களுக்கான புள்ளிகள் அமைப்பு ஒன்றை பெட்டிச் செய்தி காண்க துணை நிலை ஆளுநர் உருவாக்கினார். இடஒதுக்கீட்டுப் பிரிவிலோ, பொதுப் பிரிவிலோ காலியிடங்கள் ஏற்படுமானால் அவற்றை, குலுக்கல் முறையில் நிரப்ப வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

பொருளாதார ரீதியாக நலிவுற்றோர் பிரிவுக்கான இடஒதுக்கீட்டிலிருந்து சிறுபான்மை மதம் சார்ந்த பள்ளிகளுக்கு, அந்தப் பள்ளிகள் அரசாங்க நிலத்தில் அமைக்கப்பட்டிருந்தாலன்றி, விலக்கு அளிக்கப்பட்டது. அரசாங்கம் ஒதுக்கீடு செய்த நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுபான்மையினர் பள்ளிகளில் 20 சதவீத இடஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டும் என்று துணை நிலை ஆளுநர் அறிவித்தார்.

புள்ளிகள் அடிப்படையிலான இந்த முறையின் விளைவாக, ஒரு பள்ளியைச் சுற்றி 8 கி.மீ. சுற்றளவில் உள்ள ஒரு பெண் குழந்தைக்கு 70 புள்ளிகள் கிடைப்பது உறுதியானது. அந்தக் குழந்தையின் உடன் பிறப்புகள் யாராவது சம்பந்தப்பட்ட பள்ளியில் இருப்பார்களானால், அந்தக் குழந்தைக்கு கூடுதலாக 20 புள்ளிகள் கிடைக்கும். குழந்தையின் பெற்றோர் வேறு மாநிலத்திலிருந்து தில்லிக்கு குடிபெயர்ந்தவர்கள் என்றால் குழந்தைக்கு மேலும் 5 புள்ளிகள் தரப்படும். இவ்வாறு 100 புள்ளிகள் எடுக்கக்கூடிய குழந்தைகள், முதல் குலுக்கலுக்குத் தகுதி பெறுகிறார்கள். இந்தக் குலுக்கலுக்குப் பிறகு நிரப்பப்படாத இடங்கள் இருக்குமானால், அந்த இடங்களுக்கு 2வது குலுக்கல் நடத்தப்படும். அதில், 95 புள்ளிகள் பெறும் குழந்தைகள் இடம் பெறுவார்கள். இவ்வாறு அடுத்தடுத்து காலியாக இருக்கக்கூடிய இடங்களுக்கு புள்ளிகளின் இறங்கு வரிசைப் படி குலுக்கல் நடத்தப்படும். இது பள்ளிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியிருக்கக்கூடிய குடும்பங்களுக்கு மிகப்பெரும் வாய்ப்பாக அமைந்தது. நடப்பு கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை தொடங்குவதற்கு சில நாட்களே இருந்த நிலையில், பிப்ரவரி 27 அன்று, வேறு மாநிலங்களிலிருந்து தில்லிக்கு குடிபெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கான 5 புள்ளிகளை தில்லி அரசு விலக்கிக்கொண்டது. இந்திய ராணுவத்தின் கார்வால் ரைபிள்ஸ் படைப்பிரிவைச் சேர்ந்தவர் மேஜர் சவுரப் சரண். அவர் கடந்த ஆண்டுதான் புதுதில்லிக்கு மாற்றலாகி வந்தார். துணை நிலை ஆளுநரின் முந்தைய ஆணை அவருக்கு பெரிய ஆறுதலாக இருந்தது. அது, அதிகாரிகளுக்கு கையூட்டு வழங்காமல், பள்ளியில் சேர்வதற்கான ஒரு வாய்ப்பை அவரது குழந்தைக்கு ஏற்படுத்திக்கொடுத்தது. வேறு மாநிலங்களிலிருந்து வந்த குழந்தைகளுக்கான கூடுதல் புள்ளிகள் விலக்கிக்கொள்ளப்பட்டதை எதிர்த்து, மேஜர் சவுரப் சரண் போன்ற பெற்றோர்கள் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பிரச்சனையும் மக்கள் கவனத்திற்கு வந்தது. பெற்றோர் தரப்பு மனுவை விசாரித்தபோது, இந்த புள்ளிகள் அமைப்பை பள்ளி நிர்வாகங்கள் சீர்குலைத்திருப்பதை நீதிமன்றம் கண்டுபிடித்தது. 58 பள்ளிகளில் மாதிரி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதில் 46.8 சதவீத இடங்கள் வேறு மாநிலங்களிலிருந்து வந்தவர்களுக்கான இடஒதுக்கீடு அடிப்படையில் தரப்பட்டிருப்பது தெரிய வந்தது. பள்ளி நிர்வாகங்களால் தாக்கல் செய்யப்பட்ட 1,520 விண்ணப்ப மனுக்களில் 844 மனுக்கள் போலியாக தயாரிக்கப்பட்டதும் தெரியவந்தது.

2014 மார்ச் 6 அன்று தில்லி உயர்நீதிமன்றத்தின் ஒரு ஒற்றை நீதி ஆயம் (சிங்கிள் பெஞ்ச்), குடிபெயர்ந்து வந்த குடும்பங்களின் குழந்தைகளுக்கான புள்ளிகளை விலக்கிக்கொண்ட அரசாங்கத்தின் முந்தைய ஆணைக்குத் தடைவிதித்து. அருகமைப்பு பகுதிகளுக்கான இடஒதுக்கீடு (70 சதவீதம்) இதனால் பாதிக்கப்படுவதாகக் கருதிய பெற்றோர்கள் இந்தத் தடையால் ஆத்திரமடைந்து, மேல் முறையீடு செய்தனர். உயர்நீதிமன்ற இரட்டை நடுவர் ஆயம் (டிவிசன் பெஞ்ச்), மார்ச் 6ம் தேதி ஆணையைத் தள்ளுபடி செய்தது. அடுத்த கட்டத்தில், உச்சநீதிமன்றம், டிவிசன் பெஞ்ச் ஆணைக்குத் தடைவிதித்தது.

''ஏப்ரல் 3 அன்று டிவிசன் பெஞ்ச் பிறப்பித்த ஆணைக்குத்தான் உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதன் மூலம், ஒற்றை நீதி ஆயம் மார்ச் 6 அன்று பிறப்பித்த ஆணை செல்லுபடியாகும் என்று உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது. மார்ச் 6ம் தேதிய ஆணைப்படி, பள்ளிகள் மழலையர் வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை தாராளமாக மேற்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். மழலையர் பள்ளி சேர்க்கைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்திருப்பதாக கூறுவது தவறு.,'' என்று அசோக் அகர்வால் கூறகிறார். மழலையர் பள்ளிகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்தி வந்ததுதான் இந்தக் குழப்பத்திற்குக் காரணம். இந்தக் குழப்பத்தை உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தும், குழந்தைகளின் கல்வியில் நிர்வாக ஒதுக்கீடும் கல்விக் கட்டணமும் ஆதிக்கம் செலுத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று நம்புவோமாக.

**ஆதாரம்: தெஹெல்கா, 28 ஏப்ரல் 2014**

# திருவெற்றியூர் ஜெய்கோபால் கரோடியா அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு மாணவியை ஆசிரியை கண்டித்ததால் 03.03.2014 அன்று தற்கொலை செய்து கொண்டது குறித்து உண்மை அறியும் குழுவின் ஆய்வறிக்கை



**முகவுரை:**

பவித்ரா என்ற மாணவியை ஆசிரியை முகத்தில் எச்சில் துப்பியதால் தீக்குளித்து மரணமடைந்தாள் என்பதைப்பற்றி தின நாளிதழில் வந்த செய்தியை குறித்து மனித உரிமை மேம்பாடு மற்றும ஆராய்ச்சி அமைப்பினா் உண்மையறிய சென்றவற்றைப் பற்றிய முகவுரை.

**உண்மைஅறியும் குழுவினர்**

1. **திரு. விஜய சங்கர், வழக்கறிஞர்,** மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு
2. **சுதா, ஒருங்கிணைப்பாளர்,** மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு
3. **A. ஜான்சி ஜெயராணி, ஒருங்கிணைப்பாளர்,** மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

**பவித்ராவின் அம்மா:**

பிரியதர்ஷினியின் அப்பா பிரபு என்னிடம் உனது மகள் மற்றும் சில மாணவிகள் மற்றும் மாணவர்கள் அஜக்ஸ் பேருந்து நிலையத்தில் 24ம் தேதி மாலை பேசி சிரித்துக் கொண்டு நின்றிருந்தார்களாம். அதனால் சமூகவியல் ஆசிரியை ராணி பார்த்துவிட்டு உங்களுக்கு என்ன வேலை, வீட்டிற்கு செல்லுங்கள் என்று சைகையில் கூறினார்களாம். பேருந்தில் இருந்தபடியே மீண்டும் 25ஆம் தேதி காலை வழிபாடு (prayer) முடிந்ததும் ஆசிரியை ராணி, மாணவிகளை அழைத்து முன்னாள் நடந்த சம்பவத்தைப் பற்றி விசாரித்திருக்கிறார்கள். எனக்கு விஷயம் தெரிந்து, அதைப் பற்றி விசாரிக்க பள்ளிக்குச் சென்றேன். அங்கு ஆசிரியை ராணி, பள்ளி முடிந்ததும் வீட்டுற்கு சென்றுவிட்டார். ஆனால், மற்ற மாணவ மாணவிகளுக்கு சிறப்பு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. நான் அங்கு சென்று எனது மகளுடன் சக மாணவிகள் இருந்ததைப் பார்த்துவிட்டு, ராணி ஆசிரியை எனது மகளை திட்டினார்களாம், நீங்களும் யாரும் என் மகளிடம் பேச வேண்டாம் என்று கூறிவிட்டு எனது மகளைக் கூட்டிக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். வீட்டிற்குள் வந்ததும் அவள், சீருடையை மாற்றிக்கொண்டு வருகிறேன் என்று கூறி வீட்டின் உள்ளே உள்ள ஒரு அறைக்குள் சென்றவள் மண்ணெண்ணை ஊற்றி தன் மேல் தீயை வைத்துக்கொண்டு வெளியே வந்தாள். நான் அலறி அடித்துக்கொண்டு அவள் எரிவதை அணைத்த பிறகு எனது மகன்கள் இருவரையும் கூட்டிக்கொண்டு சுகம் என்ற தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

**பவித்ராவின் அப்பா:**

எனது பெயர் முனியாண்டி. நான் பவித்ராவின் அப்பா. நான் ஒரு தனியார் தொழிற்சாலையில் பணியாளராக

வேலை பார்க்கிறேன். எனது மகள் எரிந்துவிட்டாள் என்று எனது மனைவி கூறிய பிறகுதான் எனக்கு விஷயமே தெரியும். மகளை சுகம் மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு சென்றுள்ளனர் என்று கூறினாள். எனது மகள் 24ஆம் தேதி மாலை பள்ளி முடிந்ததும் அஜக்ஸ் பேருந்து நிலையத்தில் சக மாணவிகளுடன் மற்றும் மாணவர்களுடன் சிரித்து பேசிக் கொண்டு இருந்தாளாம். இதைப் பார்த்த பள்ளி சமூக அறிவியல் ஆசிரியை ராணி, மாணவிகளை பார்த்து இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? உடனே வீட்டிற்கு செல்லுங்கள் என்று பேருந்தில் இருந்தபடியே சைகையில் வீட்டிற்கு செல்லுங்கள் என்று கூறியிருக்கிறார். மீண்டும் 25ஆம் தேதி காலை, வழிபாடு முடிந்ததும் மாணவிகளை அழைத்து பேசினார்களாம். இதில் பிரியதர்ஷினியை மட்டும் வகுப்பிற்கு அனுப்பி விட்டார்களாம். பவித்ராவின் சக மாணவியான பிரியதர்ஷினியின் அப்பா பிரபு என்னிடம் இதனைப்பற்றி கூறியதால் நான் ஆசிரியை பார்ப்பதற்கு பள்ளிக்குச் சென்று பார்த்தபோது ஆசிரியை பள்ளியில் இல்லை. உடனே மகளுடன் இருந்த மற்ற மாணவிகளிடம் இனி என் மகளுடன் இருந்த மற்ற மாணவிகளிடம், இனி என் மகளுடன் யாரும் சேர வேண்டாம் என்று எனது மகளை திட்டினீர்களாமே என்று கேட்டுவிட்டு மகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன். கடைசியில் இப்படி செய்து கொண்டாள் என்று எனது மனைவி கூறினாள்.

### துணை தலைமை ஆசிரியர்கள் மாலினி மற்றும் பிரபு:

எங்களால் எந்தத் தகவலும் கொடுக்க முடியாது. கல்வித்துறை அதிகாரிகள் விசாரித்து விட்டு, யார் வந்து கேட்டாலும் நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம் என்றார்கள். அப்படி உடனடியான தேவையாக இருந்தால் தலைமை ஆசிரியரிடம் கேளுங்கள். இப்பொழுது ப்ளஸ் 2 மாணவர்களுக்கு தேர்வு நடப்பதால் வெளியில் சென்றுள்ளார். 11ஆம் தேதிதான் வருவார்.

### ஆய்வாளர் பிரபு, காவல்துறை:

ஆய்வாளர் பிரபு நான் H8 காவல்துறை ஆய்வாளர். எனக்கு சுகம் மருத்துவமனை நிர்வாகத்திடம் இருந்து தொலைபேசியில் அழைப்பு (5.30 p.m.) வந்தது. உடனே மருத்துவமனைக்குச் சென்றேன். பவித்ராவின் அம்மா, ஜெயகோபால் கரோடியா அரசு உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியை ராணி எனது மகளைத் திட்டியதால் எனது மகள் தற்கொலை செய்து கொண்டாள், என்றார். என்ன நடந்தது என்று தெளிவாக கூறுங்கள் என்றதற்கு, எனது மகள் 24ம் தேதி மாலை பள்ளி முடிந்ததும் அஜக்ஸ் பேருந்து நிலையத்தில் எனது மகளும் சக மாணவ, மாணவிகளும் கேலி செய்து சிரித்து பேசிக் கொண்டிருந்தாளாம். இதனை சமூக அறிவியல் ஆசிரியை தன் பேருந்திலிருந்து கண்டித்தது, இதனை கேள்விப்பட்டு பள்ளிக்குச் சென்று எனது மகளை மற்ற மாணவிகளின் முன் அடித்துதிட்டி அழைத்து வந்தேன் என்றார்கள். இந்த வழக்கு, இ.த.ச.படி பிரிவு 309 முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்தேன். மாணவியின் இறப்பிற்குப் பிறகு பிரிவு 174ல் இரண்டாம் தகவல் அறிக்கை (***FIR***) பதிவு செய்துள்ளேன். அவளின் அம்மா திட்டியதால்தான் மாணவி பவித்ரா தற்கொலை செய்துகொண்டாள் என்று வழக்கு பதித்துள்ளேன். இந்த FIR நகலை உங்களிடம் தரக்கூடாது. பிறகு இரவு 8.20 மணிக்கு சுகம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். இன்னும் இரண்டாவது வழக்குப் பதிவு செய்யவில்லை.

### காவல்துறை அதிகாரிகளிடம் மாணவி பவித்ரா:

நான் 24ம் தேதி மாலை என்னுடன் சக மாணவிகளுடன் அஜக்ஸ் பேருந்து நிலையத்தில் பேசி சிரித்துக் கொண்டிருந்தேன். எங்களது சமூக அறிவியல் ஆசிரியை எங்களைப் பார்த்துவிட்டு, வீட்டிற்குச் செல்லுங்கள் என்றார். பிறகு 25ஆம் தேதி அதாவது மறுநாள் காலை வகுப்பிற்கு பின் காலை வணக்கம் முடிந்ததும் என்னுடன் முந்தைய நாள், மாலை பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த சக மாணவிகளையும் அழைத்தார்கள். அதில் பிரியதர்ஷினியை மட்டும் நீ வகுப்பறைக்குப் போகலாம் என்றார். உடனே எங்களை அழைத்து பேசிக் கொண்டிருக்கும்போதே அசிங்கமான வார்த்தையால் என்னை மட்டும் பேசினார். பேசியதோடு இல்லாமல் எனது முகத்தில் தின்றுகொண்டிருந்த திராட்சையோடு எச்சிலைத் துப்பினார். அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும். அவர்களை வேலையை விட்டு எடுக்க வேண்டும். மாணவி பவித்ரா மற்ற மாணவிகளின் முன்னிலையில் அசிங்கப்படுத்திப் பேசி எனது முகத்தில் காறித் துப்பினார்கள். அவமானம் தாங்க முடியாமல் நான் தற்கொலை செய்ய முடிவுசெய்து தீக்குளித்தேன்.

### தலைமை ஆசிரியை:

அந்த மாணவி கொஞ்சம் சுமாராக படிப்பவள். மற்றபடி சிறப்பு வகுப்பில் படித்துக்கொண்டு இருப்பவள். ராணி ஆசிரியை பொதுவாக மாணவ மாணவிகளைத் திருத்துவார்கள். நல்ல அறிவுரை கூறுவார்கள். அப்படியொன்றும் கண்டிப்பானவர்கள் இல்லை. மாணவ, மாணவிகள் சேர்ந்து படிப்பதால் அதிக பிரச்சனைகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் உள்ளன. எனக்கே எப்படி திருத்துவது என்று கடினமாக உள்ளது. ஆசிரியை மீது பத்திரிகை நிருபர்கள் வீண் பழியை சுமத்துகிறார்கள். ஆசிரியையும் அழைத்து விசாரித்தேன். நான் அப்படி செய்யவில்லை என்று அழுகிறார். அவளின் அம்மாதான் அவளை வந்து அடித்து திட்டினார் என்று அவளுடன் இருந்த மாணவிகள் சொல்கின்றனர்.

**ஆசிரியை ராணி:**

எனது பெயர் ராணி. நான் சமூக அறிவியல் ஆசிரியை. 24.3.2014 அன்று பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு செல்லும் வழியில் மாணவிகள் மற்றும் பிற பள்ளி, கல்லூரி மாணவர்களும் அஜக்ஸ் பேருந்து நிலையத்தில் சிரித்துத் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த வழியாக நான் பேருந்தில் சென்றுகொண்டிருந்தபோது பார்த்தேன். அவர்களிடம் வீட்டிற்கு நேரத்தோடு செல்லுங்கள் என்று கை அசைத்துக் கூறினேன்.

பிறகு மறுநாள் காலை பள்ளி வளாகத்தில் காலை வணக்கம் முடிந்ததும், இவர்களை மட்டும் அழைத்து பேசினேன். மாணவி பிரியதர்ஷினியை மட்டும் வகுப்பறைக்கு செல்லும்படி கூறினேன். ஏனென்றால், 24.3.14 அன்று மாலை பிரியதர்ஷினியின் தந்தையிடம் ஏற்கெனவே தொலைபேசியில் அழைத்துபேசினேன். ஆனால், மற்ற மூன்று மாணவிகளான நந்தினி, நதினிஷா மற்றும் பவித்ரா ஆகியோருக்கு மட்டும் அறிவுரை கூறினேன். நீங்கள் ஏன் அங்கு நின்றுகொண்டு இருந்தீர்கள், மற்ற பள்ளி மாணவர்களும் அரட்டை அடித்து சிரித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் நீங்கள் ஏன் அங்கு இருக்கிறீர்கள். காலம் கெட்டுப்போய் இருக்கிறது. படிக்கின்ற வேலையை பாருங்கள். பள்ளி முடிந்ததும் உடனே வீட்டுக்குச் செல்லுங்கள் என்றேன். நான் திராட்சையெல்லாம் துப்பவில்லை. மாணவிகள் அனைவரும் எனக்கு மகள்கள் மாதிரி. நான் எப்படி அப்படியெல்லாம் சொல்லுவேன் ? மாணவிகளின் நலனில் அக்கறை கொள்வது தவறா ? மாணவிகளுக்கு அறிவுரை கூறுவது தவறா ? என்னை பழி வாங்கும் நோக்கத்துடன் மாணவியின் பெற்றோர் இருக்கின்றனர்.

ஆனால், அந்த மாதிரியான தவறான செயலை பவித்ராவிடம் செய்யவில்லை. நல்ல அறிவுரைதான் கூறினேன். மற்றபடி நான் எச்சில் துப்பவில்லை. பத்திரிகையாளர்கள் என்னைத் தவறாகப் பேசியுள்ளனர். என்னை அசிங்கப்படுத்தியுள்ளனர். நானும் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். 26.3.2014 அன்று காலைதான் மற்ற மாணவிகள் மூலமாக, பவித்ராவின் தற்கொலை முயற்சி பற்றி எனக்கு தெரியவந்தது. அப்பொழுதுதான், ஏன் இப்படி பவித்ரா செய்துகொண்டாள் என்று மாணவிகளிடம் கொண்டிருந்தேன். 25.3.2014 அன்று பவித்ராவின் அம்மா, மாலை 4.30 மணியளவில் பள்ளியில் வந்து எங்களையும், பவித்ராவையும் திட்டினார்கள். சக மாணவிகளை பார்த்து பவித்ராவின் அம்மா, இனி எனது மகளுடன் சேர வேண்டாம் என்று கூறியிருக்கிறார் என்பது தெரியவந்தது. பின் பவித்ராவின் அம்மா அவளைக் கன்னத்தில் அறைந்துவிட்டு, இனி இது மாதிரியான சம்பவங்களைப் பற்றி கேள்விபட்டால் மண்ணெண்ணைய் ஊற்றி எரித்துவிடுவேன் என்று கூறினார்களாம். அதற்கு பவித்ரா, தனது தோழிகளிடம் நானே எரித்துக்கொள்கிறேன் என்று கூறினாளாம். என்னை அம்மா சந்தேகப்படுகிறார்கள் என்று அழுதாளாம்.

**பவித்ராவுடன் இருந்த சக மாணவிகள்: நந்தினி, நதினிஷா, பிரியதர்ஷினி**

நாங்கள் 3 பேரும் பவித்ராவின் வகுப்பில் படிப்பவர்கள். நாங்கள் 9ஆம் வகுப்பு ஜெயகோபால் கரோடியா அரசினர் மேல்நிலைப் பள்ளியில் படிக்கின்றோம். 24.3.2014 அன்று மாலை 4.30 மணிக்கு பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு செல்லும்போது அஜக்ஸ் பேருந்து நிலையத்தில் மாணவ – மாணவிகளுடன் நின்று பேசி சிரித்துக் கொண்டிருந்தோம்.

ஆசிரியை ராணி எங்களைப் பார்த்துவிட்டு நீங்கள் வீட்டிற்குச் சீக்கிரம் செல்லுங்கள். இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். பேருந்திலிருந்து சைகை காட்டி உடனே வீட்டிற்கு செல்லுங்கள் என்று கூறினார். ஆனால் மறுநாள், காலை வணக்கம் முடிந்ததும் 9.30 மணி அளவில் எங்கள் நான்கு பேரையும் அழைத்து அறிவுரை கூறினார். அதில், பிரியதர்ஷினியை மட்டும், நீ வகுப்பறைக்கு செல் என்றார். பிரியதர்ஷினி கூறுகையில், ஏனென்றால் என்னுடைய அப்பாவிடம் 24ம் தேதி இரவே தொலைபேசியில் என்னைப் பற்றி பேசினாராம். உங்களது மகள் பேருந்து நிலையத்தில் சக மாணவ – மாணவிகளுடன் பேசி சிரித்துக் கொண்டிருக்கிறாள் என்று எனது அப்பாவிடம் என்னைக் கண்டிக்குமாறு கூறியிருக்கிறார். அதனால் ஆசிரியை ராணி, காலை வணக்கம் முடிந்ததும் 4 பேரையும் அழைத்து அதில் என்னை மட்டும் வகுப்பறைக்கு செல்ல சொல்லிவிட்டார். எங்கள் இரண்டு பேரை மட்டும் அறிவுரை கூறி பிறகு வகுப்பிற்கு செல்ல சொன்னார். அத்துடன் நாங்கள் 25ஆம் தேதி மாலை பவித்ராவின் அம்மா வந்து பவித்ராவை அடித்துவிட்டு பிறகு எங்களை பார்த்து நீங்கள் அவளுடன் சேர வேண்டாம். அதனால் உங்களுக்கு கெட்ட பெயராகுமாம். அதனால் நீங்கள் அவளுடன் பேச வேண்டாம் என்று கூறி நானே உன்னை மண்ணெண்ணை ஊற்றி எரித்து விடுகிறேன் என்றார். பிறகு அவளை அடித்துவிட்டு, கோபமாக அழைத்துச் சென்றார்.

**Dr. S.R. பிரேம்குமார், சுகம் மருத்துவமனை திருவெற்றியூர்:**

நான் சுகம் மருத்துவமனை அலுவலகத்தில் அதிகாரி Dr. S.R. பிரேம்குமார், சிறுமி பவித்ரா 25ஆம் தேதி மாலை

7.30 மணி அளவில் முதலுதவிக்காக இங்கே கொண்டு வரப்பட்டார். 75 சதவீதம் எரிந்துவிட்டு இருந்ததால் நான் மருத்துவமனை அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் H8 காவல்நிலைய ஆய்வாளரிடம் பேசினேன். உடனே அவர்கள் வந்து மாணவியிடம் என்ன நடந்தது என்பதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தனர். பிறகு பெற்றோரிடமும் விசாரித்தனர். எங்களின் முதலுதவிக்குப் பிறகு, 8.30 மணிக்கு கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

**கண்டறிந்த உண்மைகள்:**

- பவித்ராவின் தாயார் பள்ளிக்கூடம் முடிந்த பிறகு பள்ளிக்குச் சென்றிருக்கிறார்.
- பவித்ராவின் தாயார் மற்ற குழந்தைகளின் முன்னிலையில் பவித்ராவை கன்னத்தில் அறைந்திருக்கிறார்.
- பவித்ரா மீது மண்ணெண்ணையை ஊற்றி எரித்து விடுவதாக பவித்ராவைத் திட்டியிருக்கிறார்.
- பவித்ராவின் மீது தாயார் சந்தேகப்பட்டிருக்கிறார்.
- ஆசிரியை ராணி மற்ற குழந்தைகளின் முன்னிலையில் கண்டித்திருக்கிறார்.

**பரிந்துரைகள்:**

1. பவித்ராவை அவமதித்து, தற்கொலை செய்யத் தூண்டிய ஆசிரியை, குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவராக வழக்கில் சேர்க்கப்பட வேண்டும், தற்கொலைக்குத் தூண்டியதற்கான சட்டப்பிரிவின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும்.
2. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 174வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை மாற்றப்பட வேண்டும், குற்றவாளிகள், தற்கொலைக்குத் தூண்டியதற்காக இந்திய தண்டனைச் சட்டத்தின் 306வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும்.
3. எஸ்.சி./எஸ்.டி. (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழும் ஆசிரியை ராணி விசாரிக்கப்பட வேண்டியவராகிறார். இந்தக் குற்றங்களுக்காக ஆசிரியை ராணிக்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.
4. பள்ளியில் தனக்கு இழைக்கப்பட்ட அவமானத்தின் காரணமாகத்தான் தற்கொலை செய்துகொண்டார் என்பதால் அவரது குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் இழப்பீட்டுத் தொகை ரொக்கமாக வழங்கப்பட வேண்டும்.
5. பள்ளிக்கூடத்திலும் விடுதி வளாகத்திலும் எந்தவொரு மாணவரும் மரணமடைகிறபோது, அல்லது எந்த ஒரு மாணவரும் தற்கொலை செய்துகொள்கிறபோது அந்த மரணம் மர்மமான முறையில் நடந்திருப்பதாகவே கருதப்பட வேண்டும். அதற்கேற்பவே விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். தற்கொலை உணர்வைத் தூண்டியதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது சட்டப்பூர்வமாக வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும்.
6. பள்ளிகளிலும் விடுதிகளிலும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவை NCPCR, தேசிய மனித உரிமை ஆணையம் (NHRC), மாநில மனித உரிமை ஆணையம் (SHRC), மகளிர் ஆணையம் உள்ளிட்ட சட்டப்பூர்வ அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.
7. பள்ளிகளில் ஏற்படும் ஒவ்வொரு மர்மமான சாவுக்கும், அனைத்து கொடுமையான செயல்களுக்கு அவமதிப்புச் செயல்களுக்கும் பள்ளிக் கல்விதுறை பொறுப்பாக்கப்பட வேண்டும்.
8. (தனியார்) சுய நிதிப் பள்ளிகள் உள்பட அனைத்துப் பள்ளிகளிலும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க பள்ளிக் கல்வித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித உரிமைத் தரங்களை மீறுகிற பள்ளி நிர்வாகங்கள் மீது பள்ளிக் கல்வித்துறை சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும்.
9. பள்ளிகளில் உரிமை மீறல்களை கண்காணிப்பதற்கும் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் வழக்கறிஞர்கள், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள், பெற்றோர், பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோர் கொண்ட மனித உரிமைகள் பாதுகாப்பு பள்ளிக் குழுவை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.
10. மாணவர்களுக்கு ஆலோசனைகள் கூறுவதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு ஆலோசகரை அரசாங்கம் நியமிக்கப்பட வேண்டும்.

# பள்ளிக் குழந்தைகளிடையே சாதிய உணர்வு

## மகாராஷ்டிரா மாநிலத்தின் இரண்டு பள்ளிகளில் ஒரு ஆய்வு

**– சமீர் மொஹித்**

***மகாராஷ்டிரா மாநிலத்தின் கொங்கன் வட்டாரத்தைச் சேர்ந்த தல்சார், முந்தே என்ற இரண்டு கிராமங்களின் 84 பள்ளிக் குழந்தைகளிடையே, அவர்களது விமர்சனப்பூர்வ போக்கு குறித்து ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. பல்வேறு சாதிகளைச் சேர்ந்த குழந்தைகளை ஒன்றுபடுத்துவதில் பள்ளிகளுக்கு உள்ள பங்கினை ஆராய்வதும் இந்த ஆய்வின் நோக்கமாகும். விமர்சனமற்ற சிந்தனைப் போக்கை வளர்ப்பதில் பள்ளிகளும் சமுதாயமும் ஒன்றுக்கொன்று பங்களிக்கின்றன, அது இறுதியில் பாரம்பரியமான சிந்தனைப் போக்கை கெட்டிப்படுத்துகிறது என்பது தெரிய வருகிறது***

மராத்தா சாதியைச் சேர்ந்த ஒரு சிறுவனிடம், அவனுடைய சாதியைச் சேர்ந்த ஒரு பெண் தாங்கர் என்ற (மேய்ச்சல் தொழிலில் ஈடுபடும் சமூகம்) சாதியைச் சேர்ந்த பையனை திருமணம் செய்து கொள்வதை ஆதரிப்பானா என்ற கேள்வியை நான் கேட்டேன். அதற்கு அவன், ''ஏனென்றால், அவர்களை நான் ஆதரித்தால் எங்கள் ஆட்கள் என்னைத் திட்டுவார்கள்,'' என்று பதிலளித்தான். மறுபடியும் நான் அவனிடம், ''உன் சாதி இல்லாத வேறு சாதிப் பெண்ணுடன் உனக்கு காதல் ஏற்பட்டால் என்ன செய்வாய்,'' என்று கேட்டேன். அதற்கு அவன் உறுதியான குரலில், ''அப்படிக் காதலித்தால் எங்களை சாதியைச் சேர்ந்த பெண்ணைத்தான் காதலிப்பேன்,'' என்று கூறினான்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் கொங்கன் வட்டாரத்துப் பள்ளிகளில் நான் மேற்கொண்ட ஆய்வின் மையப் பொருளை இந்த உரையாடல் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. சாதியம் தொடர்பான பாரம்பரியமான, ஒடுக்குமுறை சார்ந்த சிந்தனைப் போக்கை இது வெளிப்படுத்துகிறது. பாலினம், சாதி, அறிவுத் தளம், உடல் சார்ந்த கண்ணோட்டங்கள் அனைத்திலும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாகவும் தங்களுக்கு சமமானவர்கள் அல்ல என்றும் கருதுவது இந்த எண்ணங்களின் அடிப்படையாக இருக்கிறது.

இந்தியச் சமுதாயத்தில் சாதி உணர்வு ஆழமாக வேறூன்றியிருக்கிறது. சிறுவர்களும் சிறுமிகளும் தாங்கள் வளர வளர இந்த சமூக பாகுபாட்டு உணர்வுகளை உள்வாங்கிக்கொள்வது தவிர்க்க இயலாததாக இருக்கிறது. இவர்கள் பெரியவர்களாகிறபோது, மற்ற மூத்தவர்களைப் போலவே இவர்களும் கரடுதட்டிப் போன கண்ணோட்டங்களைப் பெற்று விடுகிறார்கள்.

கல்வித் தரம் எப்படி இருக்கிறது என்பது ஒரு ஆழ்ந்த ஆய்வுக்கும் விவாதத்திற்கும் உரிய விஷயம்தான். ஆனால், வகுப்பறைச் சூழல்கள் எப்படி பாரம்பரியமான சாதியச் சிந்தனைகளை கெட்டிப்படுத்துகின்றன என்பது பற்றியும், விமர்சனப்பூர்வ சிந்தனையை ஊக்குவிப்பதில்லை என்பது பற்றியும் பெரிய அளவுக்கு வெளியே தெரிய வரவில்லை. சாதியத்தைப் பொறுத்தவரையில் விமர்சனப்பூர்வமற்ற பாரம்பரிய சிந்தனைப் போக்கு கறாரத் தன்மையையும், ஏற்றத்தாழ்வுகளையும் மேலும் கெட்டிப்படுத்தவே செய்கிறது. ஆகவேதான், சாதி குறித்த மாணவர்களின் சிந்தனைப் போக்கை புரிந்துகொள்வதற்காகவும் அதன் தன்மையை மதிப்பிடுவதற்காகவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குழந்தைகள் இயற்கையாகவே சுதந்திரமானவர்கள், முற்போக்கான சிந்தனை உள்ளவர்கள். ஆனால், அவர்கள் வாழ்கிற சூழல் அவர்களது முற்போக்கான சிந்தனைக்குத் துணையாக இல்லாமல் போகக்கூடும். பாரம்பரியத்தைப் பின்பற்றுமாறு பெற்றோர் வற்புறுத்துவது, கேள்வி கேட்கும் மனப்போக்கை ஊக்குவித்து வளர்க்கக்கூடிய ஒரு வகுப்பறைச் சூழல் அமையாதது போன்ற பல காரணங்கள் இதன் பின்னணியில் இருக்கின்றன. பாரம்பரியமான ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும் பாகுபாட்டு உணர்வுகளிலிருந்தும் விடுபடச் செய்வதற்காக வகுப்பறைகளுக்குள் விமர்சனப்பூர்வ சிந்தனையை வளர்ப்பதற்கான வழிகாட்டல்கள் மாநில அரசின் பாடத் திட்ட கட்டமைப்பு – 2010, தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு – 2005 ஆகிய இரண்டிலுமே உள்ளன. ஆனால் நடைமுறையில், பாரம்பரியமான, விமர்சனப்பூர்வமற்ற சிந்தனைப் போக்குதான் தொடர்கிறது. இது பாரம்பரியமான பாகுபாட்டு உணர்வுகளைப் பள்ளிகளும் கெட்டிப்படுத்துவதற்கே இட்டுச் செல்கிறது.

### சாதி: குழந்தைகளுக்குத் தெரிந்த விஷயமே

பள்ளிக் குழந்தைகள் தங்களது சாதி அடையாளம் குறித்து தெரிந்து வைத்திருக்கிறார்களா என்பதை அறிய எல்லா மாணவர்களிடமும் அவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்று கேட்கப்பட்டது. விதிவிலக்கே இல்லாமல் எல்லா குழந்தைகளும் தங்களது சாதிகளைத் தெரிந்து வைத்திருந்தார்கள். தங்களது சாதிகளைத் தெரிந்து வைத்திருப்பதாலேயே, சாதிப் பாகுபாட்டிற்கு அல்லது மரபுகளுக்கு இடமளிக்கிறார்கள் என்ற முடிவுக்குப் போய்விட முடியுமா? இதுகுறித்தும் ஆராய நான் முயன்றேன். 12 முதல் 15 வரையிலான மாணவர்கள் தங்களது சாதி குறித்துத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது, கிராமத்தில் ஒருவரது சமூக அடையாளத்திற்கான ஒரு வலுவான, தீர்மானிக்கக் கூடிய அம்சமாக சாதி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 2 கிராமங்களிலும் சாதி அடிப்படையில் பல குடியிருப்புகள் உள்ளன. ஆகவே, பல்வேறு சாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் தொடர்ச்சியாக தங்களுக்குள் தொடர்புகொள்வதற்கான ஒரு பொதுவான இடமாக இருப்பது பள்ளிக் கூடம் மட்டுமே. எனவே, நண்பர்கள் எவ்வாறு உருவாகிறார்கள் என்பதை புரிந்துகொள்வது முக்கியமாகிறது. சாதி வேலிகளை உடைத்துக்கொண்டு பழகவும், நட்பை வளர்ப்பதற்கும் ஒரு சுதந்திரமான, ஆதரவான சூழலை பள்ளிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சாதியும் நண்பர்களும்:

ஆனால், மாணவர்கள் அவரவர் சாதிகளைச் சேர்ந்த ஒருவருடன்தான் நட்பு கொள்ள விரும்புகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. 55.5 சதவீத மராத்தா சாதி மாணவர்களின் சிறந்த நண்பர்கள் அதே சாதியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதேபோல், பாதிக்கு மேற்பட்ட குணாபி சாதியைச் சேர்ந்த மாணவர்களின் சிறந்த நண்பர்கள் அதே குணாபி சாதியைச் சேர்ந்தவர்கள்தான். தாங்கர் சாதியைச் சேர்ந்த மாணவர்களின் கதையும் இதுவேதான். புத்த மதத்தையும், குராவ் சாதியையும் சேர்ந்த மாணவர்கள் மட்டும்தான் இதற்கு விதிவிலக்கானவர்களாக இருக்கிறார்கள். ஒட்டுமொத்தத்தில் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் தங்களுடைய சொந்த சாதியிலேயேதான் நண்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

மராத்தா சாதியைச் சேர்ந்த மாணவர்களில் ஒருவருக்குக் கூட புத்த மதத்தைச் சேர்ந்த நண்பர்கள் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. அதேபோல், புத்த மதத்தைச் சேர்ந்த மாணவர்களில் ஒருவருக்குக்கூட மராத்தா சாதி நண்பர்கள் இல்லை. குணாபி சாதியைச் சேர்ந்த மாணவர்களில் யாருமே தாங்கர் சாதியைச் சேர்ந்தவர்களை நண்பர்களாகக் கொள்ள விரும்பவில்லை. தாங்கர் சாதியைச் சேர்ந்தவர்களுடன் நட்பு கொள்வதில் ஒரு சிறு விருப்பம் வெளிப்பட்டது உண்மை. சாதிப் படி நிலையில் மராத்தா சாதியினர்தான் மிக உயர்ந்த நிலையில் இருப்பதாக கருதப்படுகிறது. அதற்குப் பிறகு அடுத்தடுத்த படிநிலைகளில் குராவ், சூதர், குணாபி, தாங்கர் ஆகிய சாதிகள் வருகின்றன. இதன்படி, சாதிப்படி நிலையின் அடித்தட்டில் இருப்பவர்கள் தாங்கர்கள். புத்த மதத்தினரும் கூட தாழ்ந்த சாதியினராகவே கருதப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் மஹர் சாதியிலிருந்து புத்த மதத்திற்கு மாறியவர்கள். மாணவர்களிடையே ஒரு உறுதியான அடிப்படையில் சாதி கடந்த உறவுகளுக்கான வெளியை ஏற்படுத்த பள்ளிகள் தவறிவிட்டன என்பதை இது காட்டுகிறது.

**சாதியும் நண்பர்களும் (N– எண்ணிக்கை %-)**

| நெருங்கிய நண்பரின் சாதி | நெருங்கிய நண்பரின் சாதி | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மராத்தா | 20 | 55.5 | 0 | 0 | 3 | 33.3 | 4 | 19.1 | 1 | 10 | 1 | 29 | 34.5 |
| புத்தா | 0 | 0 | 1 | 14.2 | 1 | 11.1 | 2 | 9.5 | 0 | 0 | 0 | 4 | 4.7 |
| குராவ் | 2 | 5.5 | 1 | 14.2 | 2 | 22.2 | 2 | 9.5 | 1 | 10 | 0 | 8 | 9.5 |
| குனாபி | 3 | 8.3 | 2 | 28.5 | 2 | 22.2 | 11 | 52.3 | 2 | 20 | 0 | 20 | 23.8 |
| தாங்கர் | 1 | 2.7 | 1 | 14.2 | 1 | 11.1 | 0 | 0 | 4 | 40 | 0 | 7 | 8.3 |
| தெளிவாக பதில் சொல்லாதவர்கள் அல்லது “எல்லோருமே எனக்கு நண்பர்கள் தான்” என்று பதில் சொன்னவர்கள் | 10 | 27.7 | 2 | 28.5 | 0 | 0 | 2 | 9.5 | 2 | 20 | 0 | 16 | 19.1 |
| **மொத்தம்** | **36** | **100** | **7** | **100** | **9** | **100** | **21** | **100** | **10** | **100** | **1** | **84** | **100** |

*ஆதாரம்: Primary data: 2012*

## திருமண இணையைத் தேர்ந்தெடுப்பதில் சாதி:


சாதி முறையின் முக்கிய அம்சங்களாக பாரம்பரிய உறவு, சாதி சபைகள், படிநிலைகள், அகமண முறை ஆகியவை இருக்கின்றன என்று ஆய்வாளர் கூர்யே 1969ஆம் குறிப்பிடுகிறார். அகமண முறை குறிப்பிட்ட சாதிக்குள்ளேயே திருமண உறவுகளை அடக்கிவிடுகிறது என்று ஆய்வாளர் ஷர்மா 1969யில் கூறுகிறார். அக மண முறை கருத்தாக்கம், "சாதித் தூய்மை" என்பதைக் காப்பாற்றுவதற்காக சாதி விட்டு சாதி திருமண உறவு கொள்வதைத் தடுக்கிறது. மக்களிடையே இந்தக் கருத்தாக்கம் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. ஆகவே அது இந்த ஆய்விலும் ஒரு முக்கிய அம்சமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. மாணவர்களிடம் அவர்கள் கலப்புத் திருமணத்தை ஆதரிக்கிறார்களா என்ற கேள்வி கேட்கப்பட்டது. அவர்கள் கூறிய பதில்கள் தனி அட்டவணையாகத் தரப்பட்டுள்ளன. 40.5 சதவீத மாணவர்கள் சாதிகளுக்கிடையேயான கலப்புத் திருமணத்தை ஆதரிக்கவில்லை. ஒரே சாதியைச் சேராதவர்கள் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். 21.4 சதவீத மாணவர்கள் மட்டுமே கலப்புத் திருமணத்தை ஆதரித்தார்கள். 7.1 சதவீதத்தினரும் 13.1 சதவீதத்தினரும் பெற்றோரிடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் எதிர்ப்பு வரவில்லை என்றால் கலப்புத் திருமணத்தை ஆதரிக்க தயாராக இருப்பதாகக் கூறினார்கள். இந்தக் கருத்தும், "வேறு சாதியைச் சேர்ந்த பெண்ணை (அல்லது ஆணை) திருமணம் செய்துகொள்ள மாட்டேன்" என்ற உறுதியும், பெற்றோரது தாக்கம் காரணமாகவும் சமூகத் தாக்கங்களின் காரணமாகவும் சிறு வயதிலேயே சாதியக் கருத்துகள் உருவாகிவிடுகின்றன என்பதற்கான வலுவான சான்றுகளாக இருக்கின்றன. மாணவர்களிடையே விமர்சனக் கண்ணோட்டத்தை வளர்க்க பள்ளி தவறிவிட்டன என்பதைத்தான் இது மீண்டும் வெளிப்படுத்துகிறது.

## சாதி அடிப்படையிலான குடியிருப்புகள்

சாதி வேறுபாடுகளை மாற்றுவது பள்ளிகளின் பங்கு குறித்து புரிந்துகொள்ள நான் முயற்சி செய்தேன். 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள், வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த மக்கள் கிராமத்தில் ஒன்றாக வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டனர். 23 சதவீத மாணவர்கள் மட்டுமே இக்கருத்தை மறுத்தனர். இது ஒரு ஆழ்ந்த கவலைக்குரிய விஷயம்தான். புத்த மதத்தை சாராத ஒரு மாணவனிடம், "அவர்கள் வாழும் பகுதியில் நீயும் குடியிருக்க விரும்புகிறாயா," என்று கேட்டேன். அதற்கு அவன், "சில நேரங்களில் புத்த சமூகத்தினருடன் இருக்க விரும்புகிறேன். ஆனால், எப்போதுமே அவர்களுடன் நான் விரும்பவில்லை," என்று பதிலளித்தான்.

இந்த இளம் வயதிலேயே சாதிக் கருத்துகள் வேரூன்றியுள்ளன என்பது தெரிய வருகிறது. வெவ்வேறு சாதியினர் ஒரே இடத்தில் வாழலாமா என்ற கேள்விக்கு மராத்தா சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிறுமி அளித்த பதிலும் இதே போன்றதுதான். "ஆம், எல்லோரும் ஒரே இடத்தில்தான் இருக்க வேண்டும். அப்போதுதான், சாதி அடிப்படையில் நடக்கிற சில பாகுபாடுகள் இருக்காது," என்று அவள் கூறினாள். எப்படிப்பட்ட பாகுபாடுகள் பற்றி அவள் சொல்கிறாள் என்று கேட்டபோது, "கணபதி விழாவை புத்த சமூகத்தினர் கொண்டாடுவதில்லை. கணபதியை அவர்கள் வீட்டிற்குக் கொண்டு போவதில்லை. ஆனால், அவர்கள் அப்படித்தான் செய்ய வேண்டும்," என்று அந்தச் சிறுமி பதிலளித்தாள். ஆக, அந்தச் சிறுமியின் கருத்துப்படி சாதி மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது புத்த சமூகத்தினர்தானேயன்றி, அவர்களுக்கு எதிராக வேறு யாரும் பாகுபாடு காட்டவில்லை.

**கலப்புத் திருமணம் பற்றிய கருத்து**




சாதி அடிப்படையிலான குடியிருப்புகள் இருப்பது பற்றி, 7ஆம் வகுப்பு படிக்கும் குராவ் சாதியைச் சேர்ந்த ஒரு மாணவனிடம், "வெவ்வேறு குடியிருப்புகளில் வசிப்பவர்கள் ஒன்றாகக் கலக்கலாமா," என்று கேட்டபோது அவன், "அப்படிக் கலக்கக்கூடாது ஏனென்றால் அப்படி நடந்தால் எல்லா சாதிகளும் சேர்ந்து ஒரே சாதியாகிவிடும். ஆகவே அப்படி நடக்கக்கூடாது," என்று பதில் சொன்னான். சாதிய பழக்க வழக்கம் இப்போது எப்படி இருக்கிறதோ அப்படியே தொடர வேண்டும் என்று அவன் எனக்கு விளக்கம் அளித்தான்.

சாதி ரீதியான இந்த பாகுபாட்டு உணர்வு எந்த அளவிற்கு ஆழமாக வேரோடிப் போயிருக்கிறது என்பதை புரிந்துகொள்வதுதான் தர்க்கப்பூர்வமான அடுத்தகட்ட நடவடிக்கையாக இருக்க முடியும்.

### விளையாட்டுத் துறையில் விளையாடும் சாதி

மாணவர்களிடம் ஒரு ஊக அடிப்படையிலான கேள்வி கேட்கப்பட்டது. அதாவது கிரிக்கெட் அல்லது கபடியில் அணிகள் இரண்டு இருக்குமானால், அவற்றில் ஒரு அணியின் கேப்டன் அந்த மாணவனின் சாதியைச் சேர்ந்தவராகவும் இன்னொரு அணியின் கேப்டன் வேறு சாதியைச் சேர்ந்தவராகவும் இருப்பார்களானால், குறிப்பிட்ட மாணவன் எந்த அணியில் சேர்ந்து விளையாடுவான் என்று கேட்கப்பட்டது. 50 சதவீத மாணவர்களுக்கு தங்கள் அணியின் கேப்டன் எந்த சாதியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற கருத்து இல்லை. 35.7 சதவீத மாணவர்கள் தங்களுடைய கேப்டன் தங்கள் சாதியைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டும் என்றனர். வேறு சாதியைச் சேர்ந்த ஒருவர் குறிப்பிட்ட விளையாட்டில் திறமையுள்ளவராக இருந்து அவர் அணியின் கேப்டனாகவும் இருப்பாரானால் அந்த அணியில் சேர மாணவர்கள் விரும்புவார்களா என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டது. அப்படிப்பட்ட கேப்டனுடன் நல்ல உறவு இருக்குமானால் அணியில் உள்ள மற்றவர்களின் திறமை மேம்படுவதற்கு வழி ஏற்படாதா என்று அவரிடம் கேட்கப்பட்டது. மொத்தத்தில் 3.6 சதவீத மாணவர்கள் இந்தக் கேள்விக்கு பலவகையான பதில்களை அளித்தனர்.

சுமார் 50 சதவீத மாணவர்கள் தங்களுடைய கேப்டன் எந்த சாதியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவில்லை. இது மாணவர்களின் சிந்தனைப் போக்கில் ஒரு உள்ளார்ந்த முற்போக்குத் தன்மை இருப்பதைக் காட்டுகிறது. ஆனால், 35.7 சதவீத மாணவர்கள் சாதி விஷயத்தில் கறாராக இருக்கிறார்கள், விளையாட்டுக் களத்திலும் அது பிரதிபலிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பது கவலைக்குரியதாகவே இருக்கிறது. கிராமத்தின் அமைப்பை வைத்துப் பார்க்கிறபோது அது சாதி அடிப்படையிலான குடியிருப்புகளைத்தான் கொண்டிருக்கிறது. எனவே, மாணவர்கள் தங்களது சொந்த சாதியைச் சேர்ந்த குழந்தைகளுடன்தான் பழகி வளர்கிறார்கள் என்பது புரிந்துகொள்ளத்தக்கதாக இருக்கிறது. பள்ளியில் மட்டுமே அவர்களுக்கு தொடர்ச்சியான முறையில் வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த குழந்தைகளுடன் பழகுவதற்கான சூழல் அமைகிறது. தங்கள் சாதியைச் சேர்ந்தவர்தான் கேப்டனாக இருக்க வேண்டும் என்று பெரும்பாலான குழந்தைகள் வலியுறுத்தாதது ஒரு ஆக்கப்பூர்வமான அம்சம்தான். மற்றவர்களோடு கலந்துரையாடவும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளவுமான ஒரு வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது. ஆனால், பள்ளிகளில் இப்படிப்பட்ட போக்குகள் உருவாகவில்லை என்பதும், அதற்குக் காரணம் அத்தகைய ஒரு சூழலை ஏற்படுத்த பள்ளிகள் தவறிவிட்டன என்பதும் இந்த ஆய்விலிருந்து தெரியவருகிறது.

### சாதியும் அழுக்கும்

கொங்கன் வட்டாரத்தைச் சேர்ந்த கட்காரி பழங்குடி சமூகத்தினர் வனங்களில் வசிப்பவர்கள். தங்களது வாழ்வாதாரங்களுக்கு முழுக்க காடுகளையே சார்ந்திருப்பவர்கள். ஆனால், பள்ளிகளில் பயிலும் மற்ற சாதிகளைச் சேர்ந்த மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வு அவர்களுக்கு கட்காரி சமூகம் பற்றிய மாறுபட்ட கண்ணோட்டங்கள் இருப்பதைக் காட்டுகிறது. எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அழுக்கானவர்கள் என்ற ஒரு கேள்வி இந்த மாணவர்களிடம் கேட்கப்பட்டபோது 41.7 சதவீதத்தினர் கட்காரிகள்தான் அழுக்கானவர்கள் என்று பதிலளித்தார்கள்.

இங்கே கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விஷயம் என்னவெனில், கட்காரி பழங்குடியினர் சாதி தொடர்பான இந்து மத கண்ணோட்டத்தின்படி வகைப்படுத்தப்பட்டுள்ளனர். எல்லா சாதிகளிலும் இவர்கள்தான் அழுக்கானவர்கள் என்று மாணவர்கள் சித்தரிக்கிறார்கள். இவ்வளவு சிறிய வயதிலேயே குறிப்பிட்ட ஒரு சாதி அழுக்கானது அல்லது புனிதமற்றது என்ற சிந்தனை ஏற்பட்டிருப்பது கவலைக்குரிய விஷயம்.

25 சதவீத மாணவர்கள் தாங்கள் எந்த சாதியையும் அழுக்கானதாக கருதவில்லை என்று கூறினர். இதைக்கொண்டு நான் மாணவர்கள் அடிப்படையில் தங்களது சிந்தனைப் போக்கில் முற்போக்கானவர்களாகவே இருக்கிறார்கள், வகுப்பறைகளில் இந்த மனப்போக்கை வளர்க்கிற ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். இல்லையென்றால், இந்த மாணவர்களின் மனங்களில் விரைவிலேயே சாதிப் பாகுபாட்டு சிந்தனைகள் குடியேறிவிடும்.

### சாதியும் அறிவுத்திறனும்

பொதுவாக, “தாழ்ந்த சாதிகள்” என்று கூறப்படும் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் மந்தமாகவே படிக்கிறார்கள், “மேல் சாதிகள்” என்று கூறப்படும் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் நல்ல கல்வித் திறன்கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறது.

மாணவர்கள் மனங்களில் இருக்கிற ஒரே மாதிரியான கருத்துகள் பல்வேறு சாதிகள் குறித்து பாரம்பரியமாக சொல்லப்பட்டு வருகிற பண்பாட்டுத்தளம் சார்ந்த சிந்தனைகளால் தீர்மானிக்கப்பட்டவையாகத் தோன்றுகின்றன. ஒரே மாதிரியான கருத்தோட்டங்களும் சமூக தலையீடுகளும் ஒன்றுக்கொன்று நெருக்கமாக தொடர்புள்ள அம்சங்களாக இருக்கின்றன. ஒன்றுக்கொன்று தாக்கம் செலுத்தக்கூடியதாகவும் இருக்கின்றன. ஆகவே, நாம் மாணவர்களின் சிந்தனைப் போக்கிலிருந்து சமூக அம்சத்தைப் பிரித்துப் பார்க்க முடியாது.

மாணவர்களிடையே, "தாழ்ந்த சாதி மாணவர்கள் நன்றாகப் படிப்பதில்லை என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா," என்ற கேள்வி கேட்கப்பட்டது. 54.8 சதவீத மாணவர்கள் இதை தாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றே பதிலளித்தார்கள். அவர்களது மனங்களில் பாரபட்சமில்லை என்பதற்கான அறிகுறிதான் இது. ஆனால், 27.4 சதவீத மாணவர்கள், மேல் சாதியினர்தான் நன்றாகப் படிக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆக, சிறு வயதிலேயே, சமூகக் கட்டமைப்பின் தாக்கத்தில் ஒரே மாதிரியான சிந்தனைப் போக்கு உருவாகிறது என்பதும், விமர்சனப்பூர்வ கண்ணோட்டத்தை மாணவர்களிடையே வகுப்பறைகள் வளர்க்கவில்லை என்பதும் மீண்டும் உறுதிப்படுகிறது.

### சாதியும் தேர்தலும்

தேர்தல்களில் வாக்களிப்பது தொடர்பாக மாணவர்களிடையே சாதியம் சார்ந்த சிந்தனை இருக்கிறதா என்பதை ஆராய ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 40.5 சதவீத மாணவர்கள் தங்களது சொந்த சாதியைச் சேர்ந்த வேட்பாளருக்கே வாக்களிக்க விரும்புவதாகக் கூறினர். 34.5 சதவீத மாணவர்கள் "நல்ல" வேட்பாளர்களுக்குத்தான் தாங்கள் வாக்களிக்க விரும்புவதாகக் கூறினார்கள். அடுத்த 6, 7 ஆண்டுகளில் இந்த மாணவர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுவிடுவார்கள் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

மராத்தா சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களில் 38.8 சதவீதத்தினர் நல்ல வேட்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கே வாக்களிக்க விரும்புவதாகக் கூறினர். ஆனால், 30.5 சதவீதத்தினர் மராத்தா சாதி வேட்பாளருக்குத்தான் தங்களது வாக்கு என்றனர். புத்தர்கள், குணாபி, தாங்கர் ஆகிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களில் கிட்டத்தட்ட பாதிப் பேர் இதேபோன்று சொந்த சாதி வேட்பாளர்களுக்கே தங்களது ஆதரவு என்று பதிலளித்தனர்.

### சாதியமும் ஜாதகமும்

மொத்தம் 51.2 சதவீத மாணவர்கள், ஜாதக அடிப்படையில் திருமணப் பொருத்தம் நிச்சயிப்பதை நியாயப்படுத்தினர். பள்ளிக் குழந்தைகளிடையே பகுத்தறிவு சார்ந்த, விமர்சனப்பூர்வ, நியாய சிந்தனையை வளர்க்க பள்ளிகள் தவறிவிட்டன என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

### நிறைவாக

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு பள்ளிகளிலுமே மாணவர்களிடையே சமூக ஏற்றத்தாழ்வு,ரண்டல், ஒடுக்குமுறை, சாதி அடிப்படையிலான ஆதிக்கம் போன்றவை குறித்த விமர்சனப்பூர்வ மதிப்பீடுகள் சுத்தமாக இல்லை என்பது வெளிப்படுகிறது. இது சாதி சார்ந்த ஏற்றத்தாழ்வு வளர்வதற்கு இட்டுச் செல்கிறது. இந்த கிராமங்களில் எழுத்தறிவு விகிதாச்சாரம் அதிகமாக இருக்கிறது என்றாலும் கூட பள்ளிக் குழந்தைகளிடையே விமர்சனப்பூர்வ சிந்தனை வளர்ந்திருக்கிறது என்பதை அது சுட்டிக்காட்டவில்லை.

குழந்தைகளுக்கு விமர்சனப்பூர்வ சிந்தனையும், பகுத்தாராயும் சிந்தனையும் வளர்வதில் பள்ளிகள் மிக முக்கியமான பங்காற்ற முடியும். கட்டமைக்கப்பட்டுள்ள அநீதிகள் குறித்த விழிப்புணர்வு குழந்தைகளுக்கு ஏற்படுமானால் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் சமூக மாற்றத்திற்குமான முனைப்பு அவர்களிடம் ஏற்பட முடியும். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு பள்ளிகளிலுமே சாதியப் பாகுபாடுகள் குறித்து ஒருபோதும் விவாதிக்கப்பட்டதில்லை. மாறாக, சாதி ஒரு பிரச்சனையே இல்லை என்றுதான் இந்தப் பள்ளிகளின் ஆசிரியர்கள் நினைக்கிறார்கள். மாணவர்களிடையே தீண்டாமைப் பழக்கம் இல்லை, அவர்கள் எந்தவிதமான சாதிய பாகுபாட்டையும் பின்பற்றவில்லை என்று கூட ஒரு ஆசிரியர் கூறினார். ஆனால், உண்மை என்ன என்பதை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேட்டிகள் வெளிப்படுத்துகின்றன.

பள்ளிகளும் சமுதாயமும் சேர்ந்துதான் சிந்தனைப் போக்கை உறுதிப்படுத்துகின்றன. அர்த்தமுள்ள ஒரு சிந்தனை மாற்றம் ஏற்பட வேண்டுமானால், மாணவர்களின் சமூக அணுகுமுறைகளை இறுதியாக வடிவமைக்கத்தக்க வகையில், விமர்சனப்பூர்வமற்ற நம்பிக்கைகளை கேள்விக்கு உட்படுத்துகிற, அவற்றைப் பின்னுக்குத் தள்ளக்கூடிய பாட முறைகளும் வகுப்பறைச் சூழல்களும் பள்ளிகளில் உருவாக்கப்பட்டாக வேண்டும்.

**ஆதாரம்: May 31, 2014 VOL XLIX No 22 EPW (Economic & Political Weekly )**

# இந்தியாவில் மாற்றுத் திறனாளி குழந்தைகளின் கல்வி நிலை: விமர்சனப் பார்வையில்

– ரஞ்சிதா டான்

பொதுவாக இந்தியாவில் அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளின் கல்லாமை நிலை என்பது அதிகமாகவே இருக்கிறது. குறிப்பாக பார்வை குறைபாடு, பல வகைக் குறைபாடு, மன வளர்ச்சிக் குறைபாடு உள்ள குழந்தைகளின் கல்லாமை நிலை தேசிய சராசரியோடு ஒப்பிடுகையில் மிக அதிகமாக இருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் எல்லோருக்குமான பள்ளிகளிலேயே உரிய கல்வியைப் பெறுவதற்கு முழு உரிமை பெற்றவர்கள், அவர்கள் அந்த வாய்ப்பைப் பெறுவதை உறுதிப்படுத்துவது பள்ளிகள் உள்பட அனைத்து மட்டங்களிலும் நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களின் கடமை என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்

விடுதலை பெற்ற இந்தியா கல்வித்துறையில் பல முக்கிய மாற்றங்களை சந்தித்திருக்கிறது. மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வியில் அந்த மாற்றங்கள் பிரதிபலிக்கவில்லை. உண்மையில் மாற்றுத் திறனாளிகளுக்கான கல்விக்கு உரிய கவனம் செலுத்தப்படுகிறதா, தேவையான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்று கேட்க வேண்டிய நிலையில்தான் இன்று நாம் இருக்கிறோம். உலகமயம், தொழில்மயம் என்ற வடிவங்களில் பரவலான வளர்ச்சிப் போக்குகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகளுக்கு உரிய வாய்ப்பு கிடைக்கிறதா ?

இத்தகைய கேள்விகள் எழுவதால் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக என எதுவுமே செய்யப்படவில்லை என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. அவர்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் மேற்கொண்டு கூடுதலான முயற்சிகள் தேவைப்படுகின்றன என்பதை வலியுறுத்தவே இந்தக் கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. மாற்றுத்திறனாளி குழந்தைகள் இப்போதும் பொதுவான கல்வி முறையின் அரவணைப்புக்கு அப்பால் தள்ளி வைக்கப்பட்டிருப்பது ஒரு சோகம்தான்.

பல வகைப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களில் குறிப்பிடத்தக்க ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன என்பது அரசாங்க ஆவணங்களை ஆராய்கிறபோது தெரிய வருகிறது. விடுதலைக்குப் பிறகு பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரைப் (எஸ்.சி./எஸ்.டி.) பொறுத்தவரையில் அவர்களுக்கு ஒரு வலுவான அரசியல் தளம் உருவாகியிருக்கிறது. அது அவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளில் பிரதிபலிக்கவும் செய்கிறது. அரசமைப்பு சாசனத்தின் 46வது சட்ட உரை எஸ்.சி./எஸ்.டி. மக்களுக்கு “சிறப்பான கவனமும் கல்வியும்” வழங்கப்படுவது குறித்து நேரடியாக உறுதியளிக்கிறது. ஆனால், மாற்றுத் திறனாளிகள் தொடர்பான 41வது சட்ட உரையோ, “அரசு தனது பொருளாதாரத் திறன் மற்றும் மேம்பாட்டு வரம்புகளுக்கு உட்பட்டு வேலை உரிமை, வயது முதுமை, நோய்வாய்ப்படுதல் மற்றும் ஊனமடைதல் தொடர்பான பயனுள்ள சட்டவிதிகளை உருவாக்கும்,” என்றுதான் கூறுகிறது. அரசின் பொருளாதாரத் திறன் மற்றும் மேம்பாட்டு வரம்புகளுக்கு உட்பட்டு என்று இந்த சட்ட உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது, 46வது சட்ட உரையில் உள்ளது போன்ற உடனடி நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பை பெருமளவு குறைத்து விடுகிறது. இப்படியொரு நிபந்தனை இருப்பது தேசிய அளவிலான திட்டமிடல் நடைமுறைகளில் ஆழ்ந்த தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

கடந்த பல ஆண்டுகளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான கல்வி தொடர்பாக அரசு தனது உறுதிமொழிகளை நிறைவேற்றிட பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்துள்ளது. அவற்றுள் ஒன்றுதான் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் (PIED). 1987ல் யூனிசெப் ஒத்துழைப்போடு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் 10 மாநிலங்களைச் சேர்ந்த 10 வட்டாரங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் அனுபவங்களையும் அதில் பரிந்துரைக்கப்பட்ட கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி (IEDC) என்ற, 1974ல் தொடங்கப்பட்ட திட்டத்தில் 1992ல் திருத்தங்கள் செய்யப்பட்டன. IEDC திட்டத்தில் தற்போது 15,000 பள்ளிகள் சேர்க்கப்பட்டுள்ளன. 60,000 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். சலமான்கா பிரகடனத்தில் (யுனெஸ்கோ, 1994) இந்தியா கையெழுத்திட்டத்தைத் தொடர்ந்து, 1990ம் ஆண்டுகளில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மன்றம் (NCERT) உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் வெளியிட்ட பல்வேறு அதிகாரப்பூர்வ



Source: THE NEW INDIAN EXPRESS, Wednesday, July 02, 2014

ஆவணங்களிலும், ஊடகங்களிலும் “அனைவரையும் உள்ளடக்கிய கல்வி” என்ற சொல்லாடல் விரைவாக சேர்க்கப்பட்டது.

அனைவரையும் உள்ளடக்கிய கல்வி என்பதற்கான செயல் முனைப்பு மாவட்ட தொடக்கக் கல்வி திட்டத்தில் (DPEP 1994) இணைக்கப்பட்டது. சர்வ சிக்ஷா அபியான் (SSA 2007) திட்டம் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான கல்வி தொடர்பாக காலங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வரும் இரட்டை அணுகுமுறையை விரிவுபடுத்தியது. “பன்முக வாய்ப்பு விளைவுத் திட்டம்” என்பதை அது முன்வைத்தது. இது மாற்றுத்திறனாளி குழந்தைகள் அல்லது, “சிறப்பு தேவைகள் உள்ள குழந்தைகள்” என்று அது சித்தரிக்கிற குழந்தைகளுக்கான அக்கறைகளை “அனைவரையும் உள்ளடக்கிய கல்வி” என்ற கட்டமைப்பிற்குள் கொண்டு வருகிறது.

அண்மைக்காலத்தில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், மாற்றுத்திறனாளிகளாக உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்களது கல்விப் பங்கேற்பு, கற்றல் நிலை ஆகியவற்றின் விகிதங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றது. இவர்களது கல்லாமை விகிதம், பொதுவான மக்களின் கல்லாமை விகிதத்தைவிட மிக அதிகமாக இருக்கிறது. மற்றவர்களைவிட இவர்களது பள்ளி வருகை என்பது தொடர்ந்து பின்னடைந்த நிலையிலேயே இருக்கிறது.

உலக அளவில் இக் குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி ஏற்பாடுகள் என்பதிலிருந்து இவர்களை எல்லோருக்குமான பள்ளிகளில் படிக்க வைப்பது என்ற மாற்றம் நிகழ்ந்து வருகிறது. ஆகவே, நமது நோக்கம் எல்லோருக்குமான கல்வி இவர்களுக்கும் கிடைக்கச் செய்வதாக மட்டுமில்லாமல், அது இவர்களுக்கு கட்டுப்படியானதாக பொருத்தமானதாகவும் கிடைக்க வைப்பதாக இருக்க வேண்டும். நமது பள்ளிகளை மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும் உரியவையாக மாற்றுவதன் மூலம் அனைத்துக் குழந்தைகளுக்குமான கல்வியின் தரத்தையும் மேம்படுத்த முடியும் என்பது உண்மையே. சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் பிரதான நோக்கமே அதுதான்.

முதலில் தற்போதைய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியம். இத்தகைய குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதிலும் எல்லோருக்குமான கல்விச் சூழல்களில் இவர்களைப் படிக்க வைப்பதிலும் கிடைத்த வெற்றி தோல்விகளுக்குக் காரணமான அம்சங்களைக் கண்டறிவதும் முக்கியம்.

கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வது என்பதே இக்குழந்தைகளுக்கு மிகப் பெரிய முட்டுக் கட்டையாக இருந்து வருகிறது. ஆகவே, இத்தகைய குழந்தைகளும் இளைஞர்களும் உடல் சார்ந்து எளிதாகப் பள்ளிகளுடனும் கல்வி நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்வதை உறுதிப்படுத்துகிற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. கட்டட வடிவமைப்புகளிலும் போக்குவரத்து ஏற்பாடுகளிலும் இவர்களுக்கு தடங்கலற்ற சூழல்கள் ஒரே மாதிரியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய கல்விக்கான ஒட்டுமொத்த நடவடிக்கையில் பாடத் திட்டங்கள், தேவையான ஆசிரியர்கள் போன்ற பிரச்சனைகளிலும் உரிய முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்தப் பிரச்சனையைக் கையாள்வதில் NCERT போன்ற நிறுவனங்கள் கவனம் செலுத்தி வருவதை குறிப்பிடுவது அவசியம். NCERT ஆசிரியர்கள் தொடர்பான நிலைமைகளையும் இத்தகைய குழந்தைகளுக்கு ஏற்ப வகுப்பறைகளை சீரமைப்பது தொடர்பான விஷயங்களையும் ஆய்வு செய்வதற்காக தேசிய பாடத் திட்ட கட்டமைப்பு ஆய்வு (2000) திட்டத்தின் கீழ் ஒரு குழுவை அமைத்துள்ளது.

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு செயலூக்கமுள்ள தகவல் தொடர்பு, பயன் வழங்கல் ஏற்பாடுகளை உறுதிப்படுத்துவதும் அவசியம். அதன் மூலம் இவர்களுக்கான கற்பித்தல் / கற்றல் ஏற்பாடுகளையும், இவர்களுக்கு உதவக் கூடிய பொருள்களையும் கருவிகளையும், வன்பொருள்கள் / மென்பொருள்களையும் உறுதிப்படுத்த முடியும்.

வழக்கமான பள்ளி ஆசிரியர்களுக்கு மிக விரிவான அளவில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் அப்போதுதான் ஒருங்கிணைந்த கல்வித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டங்களில் சில புதுமையான அணுகுமுறைகள் தேவை. அதற்கான திட்டங்களை உருவாக்குகிறபோது, மரபு சாராத பயிற்சி முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இந்தியாவின் மிக விரிவான (சமூகப் பொருளாதாரம், மொழி, உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில்) பன்முகத் தன்மைகளைக் கருத்தில் கொண்டு பயிற்சி திட்டங்களில் குறிப்பான உள்ளடக்கங்களைக் கண்டறிந்து சேர்ப்பதில் மிகுந்த கவனம் தேவை. அடிப்படைத் திறமைகள், தொழில்சார் அறிவு, தகவல் தொடர்பு மற்றும் உரையாடல் திறன்கள், மதிப்பிடல் நுட்பங்கள் சார்ந்த அறிவு, வள நிர்வாகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட, ஆசிரியர் பணிக்கு முந்தைய பயிற்சித் திட்டங்களுக்கான பாட முறைகள் மிகுந்த கவனத்தோடு உருவாக்கப்பட வேண்டும். வகுப்பறைகளில், வழக்கமான ஆசிரியர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் சிறப்புப் பயிற்சியாளர் நியமனம், சீரமைப்பு ஆலோசகர்கள் நியமனம், தகுதி மேம்பாட்டிற்கான தனி பயிற்சி அறைகள் போன்ற ஏற்பாடுகளுக்கு உரிய விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

செயல்பாடுகள் குறித்து தொடர்ச்சியாக கருத்தறிவதையும், கண்காணிப்பதையும் உறுதிப்படுத்துவதற்கான கட்டமைப்பும் இருக்க வேண்டும். இதில் அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றுவது, திட்டங்களை அறிவிப்பது என்பதை நிறுத்திக்கொள்ளாமல் நிச்சயமாக கூடுதலாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டாக வேண்டும். உரிய செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஏற்பாடுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும். 2020ம் ஆண்டுக்குள் மாற்றுத் திறனாளிகளுக்கு இணக்கமான கல்விக்கான ஒரு செயல் திட்டம் கொண்டு வரப்படும் என்று 2005ம் ஆண்டு மார்ச் மாதம் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (MHRD) அறிவித்தது. ஆனால், அதில் இடைக்கால இலக்குகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தை பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை ஒரே சீராக செயல்படுத்துவதற்கு பல்வேறு நிர்வாக அமைப்புகளுக்கிடையே மிகப்பெரிய அளவிற்கு, இலக்கு சார்ந்த ஒத்துழைப்புகள் உறுதிப்படுத்தப்படுவது அவசியம்.

அரசாங்கத்திடமிருந்து வரும் நிதி உதவிகளின் மூலமாக சிறப்புக் கல்வியை வழங்குவதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தனித்துவத்துடன் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் சிறப்புக் கல்வி மையங்களின் பங்களிப்பை மாற்றியமைப்பதிலும் எல்லோருக்குமான கல்வித் திட்ட இலக்குகளை அடைவதிலும் தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடு மிகவும் தேவைப்படுகிறது. ஆகவே, இந்த அமைப்புகளின் பங்களிப்பு, நோக்கம், சேவைத் தரம் ஆகியவற்றை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவையும் அவசரமும் ஏற்பட்டிருக்கிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கு எல்லோருக்குமான பள்ளிகளில் உரிய கல்வியைப் பெறுவதற்கு முழு உரிமை இருக்கிறது என்பது குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடையேயும், கல்வித்துறை சார்ந்தவர்களிடையேயும், மிகக் குறிப்பாக மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோரிடையேயும் அந்தக் குழந்தைகளிடையேயும் ஏற்படுத்தப்படுவது அவசியம். அதேபோல் மாற்றுத்திறனாளிகள் கல்வி பெறும் வாய்ப்புகளை உறுதிப்படுத்துவது பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து மட்ட நிர்வாகங்களில் உள்ளவர்களின் கடமையாகும். இது குறித்த விழிப்புணர்வும்

ஏற்படுத்தப்பட்டு உடனடி கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

நாடு தழுவிய அளவில் தொடக்கப் பள்ளிக் கல்வி குறித்த ஒரு ஆய்வை 2008ல் கோவிந்தா, பண்டோபத்யாயா இருவரும் மேற்கொண்டனர். மாற்றுத் திறனாளி குழந்தைகளை அடையாளம் கண்டு, அவர்களை எல்லோருக்குமான பள்ளிகளில் கல்வி பயிலச் செய்வதற்கு சில மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. அதே நேரத்தில் இத்தகைய முயற்சிகளில் கனிசமான அளவிற்கு மாறுபாடுகள் உள்ளன என்று அவர்களது ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. உதாரணமாக இமாச்சலப் பிரதேச மாநில அரசு 1999–2000ம் ஆண்டில் ஒருங்கிணைந்த கல்விக்கான முயற்சிகளைத் தொடங்கியது. மாற்றுத் திறனாளி குழந்தைகளாக 25,476 பேர் கண்டறியப்பட்டனர். தொடக்க நிலைப் பள்ளிகளுக்கு செல்லும் குழந்தைகளில் இது 2.34 சதவீதமாகும். தற்போது இவர்களில் 23,011 பேர் எல்லோருக்குமான பள்ளிகளோடு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். பள்ளிக்குச் செல்லாத 2465 பேர், குழந்தைகள் மாற்றுப் பள்ளி முறை உள்ளிட்ட வேறு வகையான வழிகளில் பள்ளி முறைக்குக் கொண்டுவரப்பட்டனர். அதேபோல் ஆந்திரா, ஒடிசா மாநில அரசுகளும் இந்தக் குழந்தைகளை எல்லோருக்குமான பள்ளிகளில் சேர்ப்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளன. இங்கும் அங்குமாக நடைபெறுகிற இத்தகைய சிறு சிறு முயற்சிகள் மறு சீரமைப்பைவிட மறு கட்டமைப்பை நோக்கி செல்ல வேண்டியதன் உடனடி முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகின்றன. அதிகமான மாற்றுத் திறனாளி குழந்தைகளை அடையாளம் காண்பது, சிறப்புப் பள்ளிகளை வள மையங்களாக மாற்றுவது, எல்லோருக்குமான பள்ளிச் சூழலுக்கு இத்தகைய குழந்தைகளை மாற்றுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதே தற்போதைய அணுகுமுறையாக பெருமளவிற்கு இருக்கிறது. இது போதாது. பிரச்சனையின் "வெளிப்புறத்தில்" கவனம் செலுத்துவதற்கு மாறாக "உட்புறத்தில்" கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட கல்வி அமைப்புகளில் குழந்தைகளுக்கு என்ன வழங்கப்படுகிறது, அவர்கள் வாழ விரும்பக்கூடிய வாழ்க்கைக்கு அந்தக் கல்வி எவ்வளவு தூரம் பொருத்தமானதாக இருக்கிறது ஆகியவற்றை நாம் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது.

ஆயினும், எப்படிப்பட்ட முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, சில முக்கியமான கேள்விகளை நாம் எழுப்பியாக வேண்டியிருக்கிறது, அவற்றிற்கான பதில்களை கூடிய விரைவில் விடைகளை தேடிக் கண்டுபிடித்தாக வேண்டியிருக்கிறது. மாற்றுத் திறனாளி குழந்தைகளின் மேம்பாட்டுக்கு பல்வேறு திட்டங்களை அறிவிப்பது மட்டுமே போதுமானதா? அந்தக் குழந்தைகளின் தேவைகளை ஈடுகட்டுவதாக, பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதாக உண்மையிலேயே நமது கல்வி முறை இருக்கிறதா அல்லது அறிவிக்கப்பட்ட திட்டங்கள், கொள்கைகளின் குறி இலக்குகளை எட்டுவதற்கான முயற்சிகளாக மட்டுமே அத்தகைய அறிவிப்புகள் அமைகின்றனவா? இப்படிப்பட்ட கல்வித் திட்டங்கள் மூலம் மாற்றுத் திறனாளி குழந்தைகள் உண்மையிலேயே பலனடைகிறார்களா? பதிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைப் போல கல்வியின் தரத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகிறதா? மாற்றுத்திறனாளி குழந்தைகள் குறித்த புரிதல் நமக்கு உண்மையிலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?

### மாற்றுத் திறனாளி குழந்தைகளின் வகை சார்ந்த பள்ளிச் சேர்க்கை

| மாற்றுத் திறனாளி வகைப்பாடு | பள்ளி வகுப்புகள் | | |
|---|---|---|---|
| | 1 முதல் 5 வரை | 6 முதல் 8 வரை | 1 முதல் 8 வரை |
| பார்வைக் குறைபாடு | 20.79% | 32.87% | 24.02% |
| செவிக் குறைபாடு | 11.69% | 11.04% | 11.52% |
| பேச்சுக் குறைபாடு | 13.04% | 8.28% | 11.77% |
| நடமாட்டக் குறைபாடு | 27.28% | 32.09% | 28.56% |
| மனவளர்ச்சிக் குறைபாடு | 19.68% | 8.62% | 16.73% |
| இதர குறைபாடுகள் | 7.51% | 7.10% | 7.40% |
| மொத்த மாணவர் சேர்க்கையில் மாற்றுத் திறனாளிகள் | 0.79% | 0.80% | 0.80% |

ஆதாரம்: DISE 2006 – 2007

ஆதாரம்: Mainstream, Vol XLIX No.22 EPW Economic & Political Weekly

# உடல்சார் தண்டனைகள்

## பள்ளிகளில் நடைபெறும் குழந்தை உரிமை மீறல்கள்

– பேராசிரியர். மாடபூஷி ஸ்ரீதர், நல்சார் சட்டப் பல்கலைக் கழகம், ஹைதராபாத்



Source: http://digitallearning.eletsonline.com/2014/06/cbse-reiterates-stand-on-corporal-punishment/

பெரியவர்கள் ஒவ்வொருவருக்கும் குழந்தைகள்தான் உண்மையில் பெற்றோர்கள். ஒரு குழந்தை வயது வந்த ஒருவரின் சுருக்கப்பட்ட வடிவம்தான். ஆனால், குழந்தையின் உரிமைகள் எதுவும் சுருக்கப்படுவதற்கில்லை. எப்படிப் பார்த்தாலும் ஒரு குழந்தை ஒரு முழுமையான மனிதப் பிரவிதான். குழந்தைகள் தங்களைச் சுற்றி நடப்பதை கவனிக்கிறார்கள், அவற்றைப் பற்றி சிந்திக்கிறார்கள், அதே போல செய்து பார்க்கிறார்கள், அதற்கு எதிர்வினையாற்றுகிறார்கள். வீடுகளிலும் பள்ளிகளிலும் குழந்தைகள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். மாறாக அந்த ஒழுங்கு முறைகளின் ஒரு பகுதியாக குழந்தைகள் வளர வேண்டும். குழந்தைகள் ஒழுங்கின்றி நடந்துகொள்வது பற்றி புகார் செய்ய முடிகிறது, அதைக் கண்டுபிடித்து உறுதி செய்ய முடிகிறது, நடவடிக்கை எடுக்க முடிகிறது. ஆனால், பெரியவர்களின் ஒழுங்கின்மை பற்றி புகார் செய்வது யார், கண்டுபிடிப்பது யார்? நடவடிக்கை எடுப்பது யார்? நிலைமை இப்படி இருக்க பெரியவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குக் குழந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கு எல்லா உரிமைகளும் இருப்பதாக நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட உரிமைகள் அவர்களுக்கு இருக்கிறதா?

ஒழுக்கம் என்பது கற்றுக்கொண்டு வருவதுதானேயன்றி கற்பிக்கப்பட்டு வருவதல்ல. பாடப் புத்தகங்கள் தகவல்களைத் தருகின்றன. கற்பித்தல் மூலமாக நடைபெறும் தகவல் தொடர்பு கல்வியைத் தருகிறது. அறிவு என்பது ஞானமாக மாற வேண்டும் என்றால், கல்வியில் பெறுமளவிற்கு பொதுப் புத்தி சேர்க்கப்பட வேண்டும். அதில், பின்னர் ஒழுக்கமும் சேர்ந்து கொள்ளும். ஒழுக்கம் என்பது ஒரு அணுகுமுறை, ஒரு குணாம்சம், ஒரு பொறுப்பு, ஒரு உறுதிப்பாடு. அடிப்படையில் ஒழுக்கம் என்பது ஒரு உள்ளார்ந்த விஷயம். அதனைத் திணிப்பது என்பதோ வெளியே இருந்து செய்யப்படும் செயல். கல்வி, ஒழுக்கம் ஆகிய நடைமுறைகள் உள்ளார்ந்ததாக மாற்றப்பட வேண்டும். ஒழுக்கமும் கல்வியும் சிந்தனையிலும் உணர்விலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்வதாக இருக்க வேண்டும்.

குழந்தையின் கல்வி என்பது ஆகப் பெரும்பாலும் தன்னைச் சுற்றி நடப்பதை கவனிப்பதன் மூலமாகவும் அதைப் போல செய்து பார்ப்பதன் மூலமாகவுமே வளர்கிறது. அவர்களது பங்கேற்பு என்பது அவர்களது வளர்ச்சித் திறன் சார்ந்ததாக இருக்கிறது. அவர்களது வளர்ச்சித் திறனோ சுற்றுச்சூழலையும் குடும்பத்தையும் சார்ந்ததாக இருக்கிறது. பங்கேற்புக்கு முகவுரையாக அமைவது தகவல் அறிவுதான். ஒரு குழந்தைக்கு போதுமான தகவலறிவு கிடைக்கவில்லை என்றால், அந்தக் குழந்தையால் பயனுள்ள முறையில் பங்கேற்க இயலாது. குழந்தையின் பங்கேற்பு என்பது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். குழந்தைகளின் வாய்ப்புகள் குறித்துதான் நாம் விவாதிக்க வேண்டுமேயன்றி உரிமைகளைப் பற்றி அல்ல. ஏனென்றால், குழந்தைகளுக்கு எவ்வாறு பங்கேற்பது என்று தெரியாது, தெரிந்துகொள்ளவும் முடியாது. பங்கேற்பு இல்லாமல் குழந்தைக்குள் ஒழுக்கம் என்பது

வளர்ச்சியடையாது. எவரொருவருக்கும் வண்டி ஓட்டுகிற உரிமை இருக்கலாம். ஆனால், வண்டி ஓட்டுகிற வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். ஒருவரை ஓட்டுநர் இருக்கையில் உட்கார வைக்காமலே அவருக்கு வண்டி ஓட்டுவது எப்படி என்று பாடம் நடத்துவது போன்றதுதான் இது.

எங்கும் உள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளில் மாணவர்களுக்கு உடல்ரீதியான தண்டனை வழங்கப்படுவது என்பது தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கிறது. குழந்தைகள் தங்களது பச்சிளம் முதுகுகளில் அளவுக்கு மீறிய சுமையாக பாடப்புத்தகங்களையும் நோட்டுப்புத்தகங்களையும் சுமந்து செல்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, பிரம்படி வாங்குகிற வேதனைக்கும் உள்ளாகிறார்கள். காலில் அணிந்த ஷூவுக்கு ஏற்ற சாக்ஸ் அணியவில்லை, ஷூ லேஸ் சரியாக முடிச்சுப் போடப்படவில்லை என்பன போன்ற அற்பத்தனமான காரணங்களுக்காகவெல்லாம் தண்டனை தரப்படுகிறது. கான்வென்ட் பள்ளிகளில் நுழைவாயிலுக்கு வெளியே, கொளுத்தும் வெயிலில் இருந்துகொண்டு பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மதிய உணவு ஊட்ட வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளில் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. குழந்தைகள் கடும் வெயிலில் முழங்காலில் நிற்குமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். சில நேரங்களில் மாணவர்கள் அவ்வாறு முழங்காலில் உட்கார்ந்த நிலையிலேயே, வீட்டுப்பாடங்களை முடிக்குமாறு ஆணையிடப்படுகிறது. இவ்வாறு தரையில் முழங்காலிட்டு அமர்வது என்பது மிகுந்த வலி தரக்கூடிய அனுபவம். கராத்தேயில் கருப்பு பெல்ட் வாங்கிய ஒரு உடற்பயிற்சி ஆசிரியர், தனது கட்டளைப்படி செய்து காட்டவில்லை என்பதற்காக குழந்தைகளை தனது முரட்டுக் கைகளால் அடிக்கிறார். உடற்பயிற்சி ஆசிரியருடன் விளையாட்டிலோ அல்லது பயிற்சியிலோ ஈடுபடும்போது குழந்தைகளுக்கு தரப்படுகிற தண்டனைகள் கடுமையானவையாக, தாங்க முடியாதவையாக இருக்கின்றன. குாந்தைகளை நீண்ட நேரம் நிற்க வைப்பது போன்ற உடல் சார் தண்டனைகள், எதிர்ப்பாலினத்தவர் முன்னிலையில் அவமதிப்பது போன்ற உணர்ச்சி சார் தண்டனைகள், வீட்டுக்குத் திருப்பி அனுப்புவது அல்லது நுழைவாயிலில் நிறுத்தி வைப்பது போன்ற எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தண்டனைகள் என மூன்று வகையான தண்டனைகளை குழந்தைகள் பள்ளிகளில் அனுபவிக்கிறார்கள். பிரம்பால் அடிப்பது, முட்டிகளில் தடியால் அல்லது இரும்பு அளவுகோலால் அடிப்பது, முழங்காலில் அமரச் செய்வது, பெஞ்ச் மீது நிற்க வைப்பது ஆகிய தண்டனைகள் பொதுவாக தங்குதடையின்றி தொடர்கின்றன. சுவரை நோக்கித் திரும்பி நீண்ட நேரம் நிற்பது, அப்படி நிற்கும்போது தலையில் அல்லது தொடைகளுக்கிடையே புத்தகப் பைகளை வைத்துக்கொள்வது (இது மிகவும் வலியை தரக்கூடிய தண்டனையாகும்), பள்ளிக் கட்டிடத்தைச் சுற்றி அல்லது மைதானத்தில் 10 அல்லது 20 முறை ஓடி வருவது, 100 தடவைக்கு மேல் தோப்புக்கரணம் போடுவது போன்ற தண்டனைகளையும் குழந்தைகள் அனுபவிக்கிறார்கள். தவறாக எழுதிய ஒரு வார்த்தையை 50 தடவைக்கு மேல், குறுகிய நேரத்தில் திரும்பத் திரும்ப எழுதச் சொல்கிற, சுலபமாகச் செய்ய முடியாத புதிய வகைத் தண்டனையும் தரப்படுகிறது. ஆங்கில வழி வகுப்பில் படிக்கும் மாணவர்கள் தங்கள் தாய் மொழியில் பேசினால் 50 முதல் 100 தடவை வரை அப்படி பேசமாட்டேன் என்று எழுதுமாறு கட்டளையிடப்படுகிறது. இது ஒரு உளவியல்ரீதியான தண்டனை. இந்தியாவில் கல்வி முறையிலேயே இப்படிப்பட்ட உளவியல்ரீதியான தண்டனைக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஆசிரியர் மரியாதைக்கு உரியவராகவும், அதிகாரம் வாய்ந்தவராகவும் கருதப்படுகிறார். உடல் சார்ந்த தண்டனை அளிப்பதும் அவருடைய ஒரு அதிகாரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மற்ற பல நாடுகளிலும் இதே போன்ற நிலைமைதான். இலங்கையில் உள்ள பள்ளிகளில் குழந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு வழிமுறையாக உடல் சார்ந்த தண்டனைகள் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவின் கலிபோர்னியா, மிச்சிகன், லாவா, நியூ ஜெர்ஸி, அலாஸ்கா, வாஷிங்டன், வெஸ்ட் வர்ஜீனியா உள்ளிட்ட பெரும்பாலான வட மாநிலங்களில் உடல் சார் தண்டனைகளுக்கு எதிரான வலுவான சட்டங்கள் உள்ளன. ஆனால் மொத்தத்தில் கிட்டத்தட்ட சரிபாதி மாநிலங்கள் உடல்சார்ந்த தண்டனைகளை சட்டப்பூர்வமாக அங்கீகரித்துள்ளன. எனினும், அவ்வாறு சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ள மாநிலங்களிலும் கூட, குழந்தைகளால் அல்லது காப்பாளர்களால் அளிக்கப்படும் நியாயமான உடல் சார்ந்த தண்டனைகளாகப் பாதுகாக்கப்படுகின்றன. பகல் நேர குழந்தை பராமரிப்பு இல்லங்கள், அமைப்புகள் போன்றவற்றில் உடல் சார்ந்த தண்டனைகளுக்கான கட்டுப்பாடு என்பது மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டதாக இருக்கிறது. குழந்தைகளுக்கு அளிக்கப்படும் உடல் சார்ந்த தண்டனைகளுக்கு தண்டனை விதித்த முதல் நாடு ஸ்வீடன். இப்படிப்பட்ட தண்டனைகள் தொடர்பான சட்டங்கள் எதுவும் டென்மார்க், நார்வே, ஃபின்லாந்து, ஆஸ்திரியா, குரோஷியா, லாட்வியா போன்ற இதர ஐரோப்பிய நாடுகளில் கிடையாது. ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, போலந்து, ஸ்பெயின், கனடா, நியூசிலாந்து, மெக்ஸிகோ, நமீபியா, தென் ஆப்பிரிகா, இலங்கை, ஜமைக்கா, அயர்லாந்து குடியரசு, பெல்ஜியம், கொரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பள்ளிகளின் உடல் சார் தண்டனைகளுக்கு எதிராக வலுவான இயக்கங்கள் நடந்து வருகின்றன.

நேபாளத்தின் குழந்தைகள் சட்டம் – 1992ன் சட்ட உரை 7, ''எந்தக் குழந்தையும் சித்திரவதைக்கோ கொடுமையான இதர தண்டனைகளுக்கோ உள்ளாக்கப்படமாட்டாது'' என்று அறிவிக்கிறது. ஆனால், அந்தத் தண்டனைகளை அங்கீகரிப்பது போல, குழந்தையின் தந்தை, தாய் அல்லது குடும்பத்தின் வேறு எந்த உறுப்பினராலோ காப்பாளராலோ ஆசிரியராலோ குழந்தையின் நலன்

கருதி அளிக்கப்படும் தண்டனைகள் சட்டமீறலாகக் கருதப்பட மாட்டாது என்றும் அதே சட்டம் கூறுகிறது.

இந்தியாவின் சிறார் நீதிச் சட்டமும், 1974ல் கொண்டுவரப்பட்ட பங்களாதேஷ் நாட்டின் குழந்தைகள் சட்டமும், குழந்தைகளுக்கு எதிரான கொடிய செயல்களை குற்றமாக அறிவிக்கின்றன. பெற்றோர்கள், காப்பாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் இந்தச் சட்டங்கள் பொருந்தும். இந்தியாவின் சிறார் நீதிச் சட்டம் கசையடி உள்ளிட்ட தண்டனைகளை அங்கீகரிக்கவில்லை. ஆனால் பங்களாதேஷ் நாட்டின் சட்டம், தவறு செய்யும் ஆண் குழந்தைகளுக்கும் கசையடி தண்டனை அளிக்கலாம் என்று கூறுகிறது.

ஜூனியர் கல்லூரிகள் எனப்படும் தனியார் கல்வி நிறுவனங்கள் புதிய சித்திரவதைக் கூடங்களாக உருவாகி வருகின்றன. தங்கள் குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் மருத்துவக் கல்லூரிகளிலோ பொறியியல் கல்லூரிகளிலோ இடம் கிடைக்க வேண்டும் என்ற பெற்றோர்களின் ஆசைதான் இங்கே உண்மையான குற்றவாளி. இதனை தனியார் கல்வி வர்த்தக நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்கின்றன. தீவிர பயிற்சி என்ற பெயரில் தங்கள் குழந்தைகள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படப் போகிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்தே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இத்தகைய கல்வி நிறுவனங்களில் சேர்க்கிறார்கள். சித்திரவதை செய்ய அந்த நிறுவனங்களை ஊக்குவிக்கிறார்கள். அநேகமாக, பணம் பண்ணுகிற நோக்கத்துடன் காளான்களைப்போல முளைத்துள்ள தனியார் பள்ளிகள், கான்வென்ட்டுகள், ஆங்கிலவழிப் பள்ளிகள் அனைத்திலும் கடுமையான ஒழுக்க விதிகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக, அழுக்கான காலணிகளோடு வருவது, வேறு வண்ணங்களில் சாக்ஸ் அணிவது, அயர்ன் பண்ணப்படாத சட்டை அணிவது போன்ற சின்னஞ்சிறு மீறல்களுக்காகக் கூட கடுமையான தண்டனைகள் அளிக்கப்படுகின்றன. சில நேரங்களில் அந்த தண்டனைகள் பெற்றோர்களுக்கும் தரப்படுகின்றன. நகரங்களில் பெற்றோர், பெரும்பாலும் தாய்மார்கள், தங்கள் குழந்தைகளுக்கு மதிய உணவு கொண்டுவரும்போது, கொளுத்தும் வெயிலில், பள்ளி நுழைவாயிலுக்கு வெளியே நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது அல்லது பள்ளி முதல்வரைப் பார்க்க வருமாறு குழந்தைகள் மூலம் சொல்லிவிடப்பட்டு, அப்படி வரும்போது வாசலில் நெடுநேரம் நிற்க வேண்டியிருக்கிறது. பொதுவாக, குழந்தைகளோ, பெற்றோர்களோ ஆசிரியர்களின் அடிப்பது பற்றி புகார் செய்வதில்லை. அப்படி புகார் செய்தால் பழிவாங்கப்படலாம் என்ற அச்சமே அதற்குக் காரணம். அந்த அச்சம் கற்பனையானது என்று சொல்லிவிட முடியாது. கடுமையான சித்திரவதைகள் காரணமாகவும், இது குறித்து பெற்றோர் பள்ளி முதல்வரின் கொண்டு வந்ததன் காரணமாகவும், கல்வியாண்டு முடிவதற்கு முன்பாகவே குழந்தைகள் பள்ளிகளை விட்டு வெளியேறுவது பரவலாக நடக்கிறது. இது அவர்களது கல்வியையும் மன அமைதியையும் சீர்குலைக்கிறது. குழந்தைகளின் நடத்தைகள், ஆசிரியர்களின் எதிர்வினைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறியக்கூடியவர்களாக போதுமான அலுவலர்கள் கல்வித்துறையில் இருக்க வேண்டும். தனியார் பள்ளிகளானாலும் சரி, அரசுப் பள்ளிகளானாலும் சரி அவற்றில் இப்படிப்பட்ட சித்திரவதைகள் இருக்கின்றனவா என்பதை அவர்கள் நேரில் சென்று ஆராய வேண்டும். சொல்லப்போனால் பள்ளிகளின் வரவு செலவுக் கணக்குகளையும் இதர ஆவணங்களையும் தணிக்கை செய்வதைவிட, அந்தப் பள்ளிகளின் நடைமுறைகளை தணிக்கை செய்வதுதான் மிகவும் முக்கியம். இப்படிப்பட்ட தண்டனைகள் தொடர்பாக பள்ளி நிர்வாகங்களைக் கண்காணிப்பதில் பெற்றோர் சங்கங்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும். ஆங்காங்கே நடக்கக்கூடிய பழிவாங்கல் நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு பெற்றோர் சங்கங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூட வேண்டும், தங்களது முடிவுகளை நிர்வாகங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இத்தகைய பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்காக பெற்றோர் சங்கங்களைக் கூட்டுவது பள்ளி நிர்வாகத்தின் சட்டப்பூர்வ பொறுப்பாக்கப்பட வேண்டும்.

குழந்தைகளுக்கு எதிரான உடல்ரீதியான தண்டனை முறைகளோ மனரீதியான அவமதிப்பு முறைகளோ எதுவுமே இருக்கக் கூடாது. உடல்சார் தண்டனைகளின் காரணமாக பள்ளிகளில் நிலவும் அச்சுறுத்தல் சூழலால் குழந்தைகளுக்கு ஏற்படும் மன அழுத்தமும் வேதனையும், கடுமையான போட்டிகளும் அதிக மதிப்பெண் பெறுவதற்காக அதிகமாக அழுத்தங்கள் தரப்படுவதும் என எல்லாமுமாகச் சேர்ந்து குழந்தைகளை பள்ளிகளிலிருந்து வெளியேற்றுகின்றன. பள்ளிகளில் இப்படிப்பட்ட பயங்கரமான சம்பவங்கள் தொடர்வதன் இன்னொரு விளைவுதான் குழந்தைகளின் தற்கொலைகள். ஜூனியர் கல்லூரிகளில் அர்த்தமற்ற போட்டிகள் காரணமாகவும், எதிர்காலத்தில் தொழில்சார் கல்லூரிகளில் இடம் பிடிக்க வேண்டும் என்ற மோகம் கிளப்பிவிடப்படுவதன் காரணமாகவும் மாணவர்கள் அடிக்கடி தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இது, ஏற்கனவே சீர்குலைந்துள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் மன உறுதியை மேலும் அசைக்கிறது. ''டியூஷன் தொழிற்சாலைகள்'' போல செயல்படுகிற இத்தகைய கல்வி நிறுவனங்களின் வர்த்தக லாபத்தையும் இது பாதிக்கிறது. இப்படிப்பட்ட கெடு வாய்ப்பான நிலைமைகளை நோக்கி பள்ளிக் குழந்தைகளை ஒருபோதும் விரட்டக்கூடாது. நாம் செயலில் இறங்குவதற்காக மேலும் சில குழந்தைகள் தற்கொலை செய்துகொள்ளட்டும் என காத்திருக்க முடியாது. அந்தக் குழந்தைகளின் குழந்தைப் பருவத்தை நாம் எல்லோருமாகச் சேர்ந்து காப்பாற்றியாக வேண்டும். ''குச்சியைத் தூக்கியெறியுங்கள், குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்'' என்பதே நமது புதிய முழக்கமாக இருக்க வேண்டும்.

**ஆதாரம்: May 31, 2014 VOL XLIX No 22 EPW Economic & Political Weekly**

# மணலி, எஸ்.ஆர்.எஃப் வித்யாலயா மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியில் உடல் சார்ந்த தண்டனை அளிக்கப்பட்டதால் 20.3.2014 அன்று மாணவி பூஜா தற்கொலை செய்து கொண்டது தொடர்பான உண்மையறியும் குழுவின் விசாரணை அறிக்கை



**முன்னுரை:**

திருவள்ளூர் மாவட்டம் மணலியில் உள்ள சிபிசிஎல் நகரில், வசித்து வரும், சில்லரை வேலைகளில் ஈடுபடும் வெல்டிங் தொழிலாளி திரு.மாறன் (38), அவரது மனைவி திருமதி. பொற்கொடி (32) இருவரின் மகள் பூஜா (13), எஸ்.ஆர்.எஃப். மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியில் பூஜா 8ம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தார். பூஜாவின் குடும்பம் ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்ததாகும். 2014 மார்ச் 20 அன்று பூஜா தனது வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டார். பள்ளியின் மூன்றாம் பருவ கட்டணத்தை செலுத்தாததற்காக அவமதிக்கப்பட்டதாலும் மோசமாக நடத்தப்பட்டதாலும் தான் அவர் தற்கொலை செய்துகொண்டார். தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்புக் கூட்டமைப்பால் (TNCRPN) ஒரு உண்மையறியும் குழு 2014 மார்ச் 24 அன்று அமைக்கப்பட்டது. வழக்குரைஞர் எஸ்.விஜய சங்கர் தலைமையில், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிஅமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுதா, தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பு மாநிலக் குழு உறுப்பினர் A. ஜான்சி ஜெயராணி ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

**குழுவில் இடம் பெற்ற நபர்கள்:**

**S. விஜய சங்கர்,** வழக்கறிஞர், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

**R. சுதா,** ஒருங்கிணைப்பாளர், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

**A. ஜான்சி ஜெயராணி,** மாநில குழு உறுப்பினர், TNCRPN மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

**வழக்கு விவரங்கள்:**

- மாறன், பொற்கொடி ஆகியோரின் மகள் பூஜா.
- பூஜாவின் குடும்பம் ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்தது.

- இந்தக் குடும்பம் திருவள்ளூர் மாவட்டம், மணலி, சின்னமாத்தூர், சிபிசிஎல் நகரில் வசிக்கிறது.
- பூஜாவின் தந்தை மாறன் ஒரு வெல்டிங் தொழிலாளி.
- எங்கெல்லாம் எப்போதெல்லாம் வேலைக் கிடைக்குமோ அதை செய்து வருபவர். குடும்பத்தில் பொருளீட்டுபவர் அவர் மட்டுமே. தாயார் பொற்கொடி உடலில் ஒரு பகுதி செயலற்றவராவார்.
- திருவள்ளூர் மாவட்டம், மணலி, எஸ்.ஆர்.எஃப். வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளியில் 8ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார் பூஜா.
- பூஜாவின் தங்கை ஸ்ரீஜா அதே பள்ளியில் படிக்கிறார்.
- இந்தப் பள்ளியை ஸ்ரீராம் ஃபைபர்ஸ் ஃபேக்டரி டிரஸ்ட் அறக்கட்டளை நிறுவனம் நடத்தி வருகிறது.
- பூஜாவின் பெற்றோரால் அவர்களது குறைந்த வருமானம் காரணமாக, பூஜா, ஸ்ரீஜா இருவரின் மூன்றாம் பருவ கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை.
- 20.3.2014 அன்று பூஜா தனது தாயாரின் சேலையைப் பயன்படுத்தி வீட்டின் மூங்கில் கூரையிலிருந்து தூக்கு மாட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

**வழக்கு தொடர்பான நிகழ்வுகள்:**

- பூஜாவின் தந்தை மாறன் வேலைக்காக ஆந்திர மாநிலம் காக்கி நாடாவுக்கு சென்றார். மாதம் ஒரு முறை மட்டுமே அவர் தனது குடும்பத்தைப் பார்க்க வருவார்.
- பூஜாவின் பெற்றோரால் அவர்களது குறைந்த வருமானம் காரணமாக, பூஜா, ஸ்ரீஜா இருவரின் மூன்றாம் பருவ கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை.
- பள்ளிக் கட்டண பாக்கியை 15.1.2014க்குள் செலுத்த வேண்டும் என்று பள்ளி நிர்வாகம் சுற்றறிக்கை அனுப்பியது.
- ஆகவே, 15.3.2014 அன்று பொற்கொடி பள்ளிக்குச் சென்று தலைமை ஆசிரியை திருமதி. சைலஜாவை சந்தித்து, தங்களது குறைந்த வருமானம் காரணமாக மூன்றாம் பருவக் கட்டணத்தை செலுத்த இயலவில்லை என்று தெரிவித்தார். பூஜாவிற்கு மாற்றுச்சான்றிதழ் கோரும் கடிதத்தையும் அளித்தார்.
- அதன்பிறகும் பூஜா தொடர்ந்து பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தார்.
- 19.3.2014 அன்று பள்ளியின் காலை நேர பிரார்த்தனைக் கூட்டத்தில், பள்ளிப் பருவக் கட்டணத்தை செலுத்தாத அனைத்து மாணவர்களும் தங்களது இருக்கைகளில் அமர அனுமதிக்க மாட்டார்கள் என்று தலைமை ஆசிரியை திருமதி. சைலஜா அறிவித்தார்.
- பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பிறகு மாணவர்கள் வகுப்புக்கு வந்தனர். பூஜாவை பள்ளிக் கட்டணம் செலுத்தாத மற்ற மாணவர்களோடு தரையில் அமர வைத்தார் வகுப்பு ஆசிரியை சித்ரா.
- வீட்டுக்குத் திரும்பி வந்த தனது தாயாரிடம் கட்டணத்தை செலுத்தாததால் தனக்கு பள்ளியில் ஏற்பட்ட அவமானத்தையும் வேதனையையும் விவரித்தார்.
- அடுத்த நாளும் (20.3.2014) இப்படியே நடந்தது.
- 20.3.2014 வியாழனன்று பள்ளியில் இருந்து வீடு திரும்பிய பூஜா அன்றைக்கும் தரையில் அமர வேண்டியிருந்ததைப் பற்றிச் சொல்லி, உடனடியாக கட்டணத்தைச் செலுத்துமாறு கெஞ்சினார்.
- பூஜாவின் தந்தை தனக்கு முதலாளியிடமிருந்து முழு ஊதியம் வரவில்லை என்றும், அதனால் தன்னால் பள்ளிக் கட்டணத்தை செலுத்த இயலாது என்றும் கூறினார்.
- பள்ளியில் தனக்கு ஏற்பட்ட வேதனையையும் அவமானத்தையும் பெற்றோர் புரிந்துகொள்கிறார்களா என்று பூஜா கேட்டார்.
- மாலை 6.30 மணியளவில் பூஜாவை வீட்டில் தனியாக விட்டுவிட்டு அவரது பெற்றோர் உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டனர்.
- சுமார் அரை மணிநேரம் கழித்து தாயார் வீட்டுக்குத் திரும்பி வந்தார்.
- வீட்டுக்குள் நுழைந்த தாயார் தனது சேலையில் மூங்கில் கூரையிலிருந்து பூஜா தூக்கில் தொங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தார்.
- பொற்கொடி அழுது அலறினார். அதைக் கேட்ட, பக்கத்து வீட்டுக்காரர்கள் இருவர் வீட்டிற்குள் வந்து சேலையை அறுத்து பூஜாவின் உடலைக் கீழே இறக்குவதற்கு பொற்கொடிக்கு உதவினார்கள்.
- அவர்கள் பூஜாவின் உடலை அருகில் உள்ள ஆனந்தா மருத்துவமனை என்ற தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.
- பூஜா மரணமடைந்தபின் கொண்டு வந்திருப்பதாக மருத்துவமனையில் அறிவிக்கப்பட்டது.

- ஆகவே பூஜாவின் உடல் வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.
- இரவு 8.30 மணியளவில் பூஜாவின் தற்கொலை பற்றிய தகவலை அறிந்த மணலி காவல் துறையினர் பூஜாவின் வீட்டிற்கு வந்தனர்.
- காவல்துறையினர் விசாரணைக்குப் பிறகு பூஜாவின் உடலை ஸ்டான்லி மருத்துவமனைக்கு உடற்கூராய்வுக்காக (பிரேதப் பரிசோதனை) அனுப்பி வைத்தனர்.
- 21.3.2014 அன்று உடற்கூராய்வு மேற்கொள்ளப்பட்டது. பின்னர், பூஜாவின் உடல் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- அன்றைக்கே பூஜாவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

**ஆதாரங்கள்:**

**திருமதி. பொற்கொடி (பூஜாவின் தாயார்):**

என் பெயர் பொற்கொடி. நான் வீட்டை கவனித்துக்கொள்கிறேன். நான் ஓரளவுக்கு ஊனமுற்றவள். என் மகள் பூஜா, எஸ்.ஆர்.எஃப். மெட்ரிகுலேஷன் பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். வறுமையின் காரணமாக எங்களால் பூஜாவின் மூன்றாம் பருவ கட்டணத்தை செலுத்த முடியவில்லை. எனது கணவர் வேலை செய்வதற்காக ஆந்திராவின் காக்கிநாடாவிற்குச் சென்றுவிட்டார்.

மூன்றாம் பருவ கட்டணத்தைச் செலுத்துமாறு பள்ளிக் கூடத்தில் தொடர்ந்து சொல்லி வந்தார்கள் என்று பூஜா புகார் செய்தாள். கொஞ்ச நாள் பொறுத்திருக்குமாறும் கட்டணத்தை நானே செலுத்துவதாகவும் நான் அவளிடம் சொன்னேன். ஆனால், கட்டணத்தைச் செலுத்துமாறு என்னை தொடர்ந்து தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். ஆகவே, நான் பள்ளிக்கூடத்திற்குச் சென்று தலைமை ஆசிரியர் திருமதி. சைலஜாவைப் பார்த்து கட்டணத்தை செலுத்த மேலும் அவகாசம் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். கூடிய விரைவில் கட்டணத்தை செலுத்துமாறு திருமதி. சைலஜா என்னிடம் கூறினார்.

எங்களால் கட்டணம் செலுத்த முடியவில்லை என்பதாலும், நாங்கள் வறுமைக்கோட்டிற்கு வாழ்வதாலும், பூஜாவை அரசுப் பள்ளியில் சேர்க்க விரும்புகிறேன் என்று சொல்லி டீசி. கொடுக்குமாறு தலைமை ஆசிரியரிடம் கேட்டுக்கொண்டேன். டீசி. வேண்டுமானால், பிப்ரவரி 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று தலைமை ஆசிரியர் என்னிடம் கூறினார். மார்ச் 21 அன்று பள்ளிக்கூடம் முடிந்த பிறகு வீட்டிற்கு வந்த பூஜா பாத்திரம் கழுவுவது, தரையைக் கூட்டுவது போன்ற வீட்டு வேலைகளைச் செய்தாள். கொஞ்சம் சாப்பாடு கொடுக்குமாறு என்னிடம் கேட்டாள். சோறு வேண்டுமா என்று நான் கேட்டேன். சோறும் தண்ணீரும் வேண்டும் என்று அவள் சொன்னாள். அதை நான் கொடுத்தேன். அவள் சந்தோஷமாக வயிறு நிறைய சாப்பிட்டாள். (பூஜாவுக்கு, அதே பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும் தங்கையும், ஒன்றரை வயது தம்பியும் இருக்கிறார்கள்.) அவளுடைய தம்பியும் சாப்பிட்டான். இதற்கிடையே பூஜாவின் தங்கை டியூசனுக்காக போய்விட்டாள்.

மார்ச் 21 மாலை 5.30 மணியளவில் பூஜா சாப்பிட்டு முடித்த பிறகு, தந்தை திரு. மாறன் வேலையிலிருந்து திரும்பி வந்தார். ஒரு மாதம் கழித்து அப்பாவைப் பார்த்த பூஜா, "அப்பா உங்களால் ஃபீஸ் கட்ட முடியுமா? அப்படி செய்யாவிட்டால் என்னை தரையில் உட்காரச் சொல்கிறார்கள் தெரியுமா, தயவு செய்து ஃபீஸ் கட்டிவிடுங்கள் அப்பா," என்று சொன்னாள். அதன் பிறகு தனது தந்தையிடம், "ஏன் என்னையே முறைத்துப் பார்க்கிறீர்கள்," என்று கேட்டாள். ஆகவே, தந்தை வெளியே போனார். அதன்பிறகு என்னிடம் தான் படிக்க விரும்புவதாகச் சொன்னாள். தம்பி வீட்டில் இருந்தால் தன்னால் படிக்க முடியாது என்றும், அதனால் அவனை வெளியே கொண்டு போகுமாறும் என்னிடம் சொன்னாள். மறுநாள் அவளுக்கு ஒரு டெஸ்ட் இருந்தது.

நான் மகன் மோனிஷை தூக்கிக்கொண்டு வெளியே போனேன். இரவு 7.20 மணி வாக்கில் நான் திரும்பி வந்த போது பூஜா தூக்கில் தொங்கிக்கொண்டிருந்தாள். எனக்கு நீதி வேண்டும். தலைமை ஆசிரியரிடம் நான் சீக்கிரமே ஃபீஸ் கட்டி விடுவதாக சொல்லியிருந்தேன். பிறகு ஏன் என் குழந்தை தண்டிக்கப்பட்டாள்?

**காவல் ஆய்வாளர் ரமேஷ் பாபு, M6 காவல் நிலையம், மணலி**

பூஜா சாவு குறித்து எனக்கு 10.15 மணியளவில் ஒரு தொலைபேசி தகவல் வந்தது. நாங்கள் அந்த இடத்திற்குச் சென்று, உடலைப் பெற்றுக்கொண்டு பூஜா தூக்குமாட்டிக்கொண்ட வீட்டிலும் அந்த இடத்திலும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டோம். பக்கத்து வீட்டுக்காரர்களையும் பூஜாவின் வகுப்புத் தோழர்கள் சுரேஷ், கிஷோர் ஆகியோரையும் நான் விசாரித்தேன். பிறகு, 11.30 மணியளவில் நாங்கள் பூஜாவின் உடலை ஸ்டான்லி மருத்துவமனைக்கு உடற்கூராய்வுக்காக கொண்டு சென்றோம்.

எனது விசாரணையின்போது பூஜாவின் தந்தை ஆந்திராவில் ஒரு தனியார் நிறுவனத்தில் வெல்டராக வேலை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. மாதத்தில் ஒரு முறை அவர் வீட்டிற்கு வருவது வழக்கம். அவர் ஒரு கூலித்

தொழிலாளி. நிறைய குடிப்பழக்கம் உள்ளவரான அவர் பொறுப்புள்ள தந்தையாக இல்லை. அவருடைய மனைவி பொற்கொடி வீட்டைக் கவனித்து வந்தார். அவர்களுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உண்டு. மகள்கள் பூஜா,ஸ்ரீஜா இருவரும், சம்பவ நாள் வரையில் எஸ்.ஆர்.எஃப். பள்ளியில் எல்.கே.ஜி. வகுப்பிலிருந்து படித்து வந்திருக்கிறார்கள்.

மாறன் வீட்டிற்கு குறைந்த பணம்தான் கொடுத்து வந்திருக்கிறார். ஆகவே, அவர்கள் குழந்தைகளின் பள்ளிக் கட்டணத்தை செலுத்த உண்மையிலேயே மிகவும் சிரமப்பட்டு வந்திருக்கிறார்கள். பூஜாவுக்கும் ஸ்ரீஜாவுக்கும் மூன்றாம் பருவக் கட்டணத்தை அவர்களுடைய பெற்றோர் செலுத்தவில்லை. ஆகவே, தலைமை ஆசிரியர் திருமதி. சைலஜா, பள்ளிக்கு பொற்கொடியை வரவழைத்துக் கட்டணத்தை செலுத்துமாறு கூறியிருக்கிறார். ஆனால், பொற்கொடி மேலும் கொஞ்சம் அவகாசம் தருமாறு கேட்டிருக்கிறார்.

அதன் பிறகு அவர் தலைமை ஆசிரியரிடம் தன்னால் கட்டணத்தை செலுத்த முடியவில்லை என்றும், ஆகவே பூஜாவுக்கு மாற்றுச் சான்றிதழ் கொடுக்குமாறும் கூறியிருக்கிறார். பிப்ரவரி 15ம் தேதிக்கும் மாற்றுச் சான்றிதழுக்கு விண்ணப்பம் அளிக்குமாறு சைலஜா கூறியிருக்கிறார். ஆகவே, பொற்கொடி பிப்ரவரி 15 அன்று பள்ளிக்குச் சென்று மாற்றுச் சான்றிதழ் கோரி விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். அன்று மாலை வீட்டிற்குத் திரும்பி வந்த பூஜா அங்கே தனது அப்பா இருப்பதைப் பார்த்து, பள்ளிக் கட்டணத்தை செலுத்தும்மாறு மாற்றுச் சான்றிதழ் வாங்க வேண்டாம் என்றும் கூறியிருக்கிறார்.

பூஜாவின் தந்தை தன்னால் கட்டணத்தை செலுத்த முடியவில்லை என்றும் அதனால், எஸ்.ஆர்.எஃப். பள்ளியிலிருந்து நிறுத்தப் போவதாகவும் சொன்னார். ஆனால், பூஜா எஸ்.ஆர்.எஃப். பள்ளியில்தான் படிப்பேன் என்று பிடிவாதமாக சொல்லியிருக்கிறார். ஆகவே, மாறன் 3,000 ரூபாய் கொடுத்திருக்கிறார். குடும்பத்தில் சண்டை ஏற்பட்டிருக்கிறது. தாய், மகள் இருவரையும் தந்தை அடித்திருக்கிறார். பிறகு, பூஜாவின் அம்மா, அப்பா இருவரும் வீட்டிலிருந்து வெளியே சென்றார்கள். இதனிடையே பூஜா தூக்கு மாட்டிக்கொண்டார். எனது விசாரணையின்போது எனக்கு சொல்லப்பட்ட தகவல் இதுதான்.

பூஜாவுடன் படிக்கும் கிஷோரிடம் விசாரித்தேன். அவரும் கட்டணம் செலுத்தவில்லை அதனால், பூஜாவுடன் அவரும் தரையில் உட்கார்ந்திருந்தார். அவர்கள் ஏன் தரையில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று சித்ரா டீச்சர் கேட்டதாக கிஷோர் கூறினார். கட்டணம் செலுத்தாததால் தரையில் உட்கார்ந்திருப்பதாக அவரிடம் இவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருவரும் வகுப்பிற்கு வெளியே நிற்குமாறு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் வகுப்பறைக்குள்ளேயே உட்கார்ந்திருந்து பாடத்தைக் கவனித்து வந்திருக்கிறார்கள்.

ஆகவே, இது பள்ளி நிர்வாகத்தின் தவறு அல்ல. குடும்பப் பிரச்சனையும் இருந்திருக்கிறது. 25 சதவீதம் பள்ளிக்கூடத்தில் பிரச்சனை இருந்திருக்கலாம். ஆனால், 75 சதவீத பிரச்சனை பெற்றோர் சம்பந்தப்பட்டதுதான்.

**தலைமை ஆசிரியர் திருமதி. சைலஜா**

நான் பள்ளியின் தலைமை ஆசிரியர். எஸ்.ஆர்.எஃப். அறக்கட்டளை என்னை இங்கு நியமித்திருக்கிறது. இந்த அறக்கட்டளை லாப நோக்கமுள்ள நிறுவனமல்ல. குறைந்தபட்சம் கட்டணம்தான் வசூலிக்கிறார்கள். இந்தப் பகுதியில் உள்ள மிகச் சிறந்த பள்ளிகளில் இதுவும் ஒன்று.

தொடக்கப்பள்ளி வகுப்புகளில் 2 பிரிவுகள் உள்ளன. அதன் பிறகு, 10ம் வகுப்பு வரையில் ஒரு பிரிவுதான். இது ஒரு இருபாலர் பள்ளி. இங்கு மொத்தம் 740 மாணவர்கள் பயில்கிறார்கள். 31 ஆசிரியர்கள் உள்ளனர். ஆசிரியர்களில் 28 பேர் பெண்கள். மூன்று பேர் ஆண்கள். ஒவ்வொரு வகுப்பிலும் 40 குழந்தைகள் வரை மட்டுமே சேர்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் பள்ளியை நிர்வகிக்கப் போதுமானதாக இல்லை. ஆகவே, ஒவ்வொரு ஆண்டும் எஸ்.ஆர்.எஃப். அறக்கட்டளை ஆசிரியர்கள் ஊதியத்திற்காக ரூ.10 லட்சம் வழங்குகிறது. அறக்கட்டளைதான் பள்ளியைப் பராமரிக்கிறது. ஆசிரியர்களது ஊதியத்திற்காக நாங்கள் மாணவர்கள் தருகிற கட்டணத்தைத்தான் சார்ந்திருக்கிறோம்.

கட்டணத்தைச் செலுத்துவதற்கான ஆண்டின் கடைசி மாதம் மார்ச் என்பதால், கட்டணத்தை செலுத்துமாறு நான் பூஜாவின் அம்மாவிடம் கூறினேன். உரிய காலத்தில் பெற்றோர் பணம் செலுத்தத் தவறும்போது, அதனால் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் எங்களுக்கு ஏற்படும் சிரமத்தை விளக்கினேன். ஆகவே, பொற்கொடி தனக்கு மாற்றுச்சான்றிதழ் கொடுக்குமாறு கேட்டார். ஆகவே நான் அவரிடம் பிப்ரவரி 15ம் தேதிக்குள் மாற்றுச்சான்றிதழுக்கு விண்ணப்பிக்குமாறு சொன்னேன். மாற்றுச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்க பிப்ரவரி 15தான் கடைசி நாள். ஆகவே, பொற்கொடி பள்ளிக்கு வந்து மாற்றுச்சான்றிதழ் கோரி விண்ணப்பம் அளித்தார். ஆனால், கட்டணத்தை செலுத்தவில்லை. பூஜா தூக்குமாட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டது பற்றியும், பள்ளிக் கட்டணம் செலுத்தாததால் பூஜாவை நான்தான் வகுப்புக்கு வெளியே நிறுத்தினேன் என்றும் பேசப்படுவது பற்றி நான் கேள்விப்பட்டேன். நான் யாரையும் வகுப்பிற்கு வெளியே

நிறுத்தவில்லை. ஆனால், கட்டணம் செலுத்தாதவர்களை தரையில் உட்காரச் சொன்னேன். செய்தியைக் கேள்விப்பட்டு நான் உண்மையிலேயே அதிர்ச்சியடைந்தேன். இது ஒட்டுமொத்தத்தில் பள்ளிக் கூடத்தையும் என்னையும் பழிவாங்குகிற செயல்தான்.

**கிஷோர் (பூஜாவின் வகுப்பு தோழன்):**

பூஜாவுடன் நான் ஒரே வகுப்பில் படித்து வந்தேன். 21ம் தேதி பூஜாவையும் என்னையும் தரையில் உட்காரும்படி சொன்னார்கள். ஏனென்றால், நாங்கள் ஃபீஸ் கட்டவில்லை. டீச்சர் எங்களை வகுப்பிற்கு வெளியே நிற்கச் சொல்லவில்லை. அன்று ஒரு நாள் முழுக்க நாங்கள் வகுப்பறையில் தரையில் உட்கார்ந்திருந்தோம். எங்கள் வகுப்பாசிரியர் சித்ரா, கணித ஆசிரியர் ஐயப்பன் இருவரும் நாங்கள் தரையில் உட்கார்ந்திருப்பது ஏன் என்று கேட்டார்கள். நாங்கள் ஃபீஸ் கட்டவில்லை என்று நான் பதில் சொன்னேன்.

**வகுப்பாசிரியர் திருமதி. சித்ரா**

என் பெயர் சித்ரா பூஜாவின் வகுப்பாசிரியர். பூஜா ஒரு நல்ல பெண். நல்ல நடத்தை உள்ளவள். ஆனால், சராசரியான மாணவிதான். பள்ளிச் சீருடைக்காக நான் பூஜாவுக்கு அளவெடுத்தபோது, அவள் மாற்றுச்சான்றிதழ் வாங்கப் போவதாக என்னிடம் சொன்னாள். எனவே, நான் அளவெடுக்கவில்லை. பிறகு பூஜா என்னிடம் வந்து, டீச்சர் என் பெற்றோரிடம் டீ.சி. வாங்க வேண்டாம் என்று சொல்லுங்கள், நான் இதே ஸ்கூலில்தான் படிக்க விரும்புகிறேன் என்று சொன்னாள். எனக்கு இந்த ஸ்கூல் பிடித்திருக்கிறது. வேறு ஸ்கூலுக்கும் போக விரும்பவில்லை என்றாள்.

**கண்டறிந்த உண்மைகள்:**

- பூஜாவின் குடும்பம் ஒரு பட்டியல் சாதி சமூகத்தைச் சேர்ந்தது.
- திருவள்ளூர் மாவட்டம், மணலியில் உள்ள எஸ்.ஆர்.எஃப். வித்யாலயா உயர்நிலைப் பள்ளியில் பூஜா 8ம் வகுப்பு படித்து வந்தாள்.
- பூஜாவின் பெற்றோர் மூன்றாம் பருவக் கட்டணம் செலுத்தத் தவறினர்.
- 19.4.2014 அன்று எஸ்.ஆர்.எஃப். பள்ளி தலைமையாசிரியர் பிரார்த்தனைக் கூட்டத்தின்போது மூன்றாம் பருவ கட்டணத்தை செலுத்தத் தவறிய மாணவர்கள் வகுப்பறையில் இருக்கைகளில் அமர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவித்தார்.
- தலைமை ஆசிரியரின் ஆணைப்படி பூஜா உள்பட அனைத்து மாணவர்களும் வகுப்பாசிரியர் சித்ராவால் தரையில் உட்கார வைக்கப்பட்டனர்.
- மறுநாளும் இப்படியே நடந்தது.
- 20.4.2014 அன்று பள்ளியிலிருந்து திரும்பி வந்த பூஜா தரையில் உட்கார வைத்தன் மூலம் பள்ளியில் தான் அவமதிக்கப்பட்டுவிட்டதாக சொன்னாள். தரையில் உட்காருவது தனக்கு அவமானமாக இருக்கிறது என்று கூறிய பூஜா, கட்டணத்தை செலுத்துமாறு பெற்றோரிடம் கூறியிருக்கிறாள்.
- வறுமை நிலையில் வாழ்ந்துகொண்டிருப்பதால் தங்களால் பள்ளிக் கட்டணத்தை செலுத்த முடியாது என்று பூஜாவின் பெற்றோர் கூறினார்கள்.
- அன்று மாலை 6.30 மணியளவில் பூஜாவின் பெற்றோர் அவரை வீட்டில் தனியாக விட்டுவிட்டு வெளியே போனார்கள்.
- 30 நிமிடங்களில் பூஜாவின் அம்மா வீட்டிற்குத் திரும்பி வந்தார்.
- வீட்டிற்குத் திரும்பி வந்த அவர், பூஜா வீட்டின் மூங்கில் கூரையிலிருந்து அம்மாவின் சேலையைப் பயன்படுத்தி தூக்கில் தொங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தார்.
- பக்கத்து வீட்டுக்காரர்கள் சேலையை அறுத்து பூஜாவின் உடலைக் கீழே இறக்க உதவினார்கள்.
- அருகில் உள்ள ஆனந்தா மருத்துவமனைக்கு பூஜாவின் உடல் கொண்டு செல்லப்பட்டது.
- பூஜா இறந்த நிலையில் கொண்டுவரப்பட்டதாக ஆனந்தா மருத்துவமனை மருத்துவரால் அறிவிக்கப்பட்டது.
- இரவு 8.30 மணியளவில் பூஜாவின் சாவு குறித்து காவல்துறைக்குத் தகவல் கிடைத்தது. அவர்கள் பூஜாவின் வீட்டிற்கு வந்தார்கள்.
- பூஜாவின் உடல் காவல்துறையினரால் ஸ்டான்லி மருத்துவமனைக்கு உடற்கூராய்வுக்காகக் கொண்டு செல்லப்பட்டது.
- 21.4.2014 அன்று உடற்கூராய்வு செய்யப்பட்டது, பூஜாவின் பெற்றோரிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது.
- அன்று மாலை பூஜாவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

**முடிவு:**

மூன்றாம் பருவக் கட்டணத்தை செலுத்தாததால் (தரையில் உட்கார வைக்கப்பட்டதன் மூலம்) பள்ளியில் அவமதிக்கப்பட்டதன் காரணமாக 20.4.2014 அன்று பூஜா தனது தாயின் சேலையைப் பயன்படுத்தி தூக்குமாட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

**பரிந்துரைகள்:**

- பள்ளிக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக மாணவர்களிடம் ஆசிரியர்கள்/ பள்ளி நிர்வாகம் எதையும் பேசக்கூடாது.
- அவர்கள் பெற்றோரிடம் மட்டுமே கட்டணம் குறித்து பேச வேண்டுமேயன்றி, மாணவர்களிடம் பேசக்கூடாது.
- பெற்றோர் ஆசிரியர் கழக (பி.டி.ஏ.) கூட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்துவதற்கு பள்ளி நிர்வாகங்கள் பொறுப்பேற்க வேண்டும்.
- மாணவர்களோ பெற்றோர்களோ உரிய காலத்தில் கட்டணம் செலுத்தத் தவறுகிறபோது அந்தத் தாமதத்திற்காக எந்தக் காரணம் கொண்டும் மாணவர்கள் தண்டிக்கப்படக்கூடாது.
- கட்டணம் செலுத்தாததற்காக மாணவர்கள் தண்டிக்கப்படுவார்களானால் பள்ளி நிர்வாகத்திற்கு தண்டனை அளிக்கப்பட வேண்டும்.
- பூஜாவை அவமதித்து அவரை தற்கொலை செய்யத் தூண்டிய ஆசிரியர்கள் / தலைமையாசிரியை / நிர்வாகம், குற்றம்சாட்டப்பட்டவர்களாக அறிவிக்கப்பட்டு, ஒரு குழந்தையை தற்கொலைக்குத் தூண்டியதற்காக நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.
- குற்றவியல் நடைமுறைச் சட்டம் 174வது பிரிவின் கீழ் மட்டுமே பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கை திருத்தப்பட வேண்டும், தற்கொலைத் தூண்டிதற்காக குற்றம்சாட்டப்பட்டோர் மீது வழக்கு நடத்தப்பட வேண்டும்.
- பள்ளியில் ஏற்பட்ட அவமதிப்பின் காரணமாகவே பூஜா தற்கொலை செய்துகொண்டார் என்பதால் அவரது குடும்பத்திற்கு இழப்பீடாக ரூ.5 லட்சம் வழங்கப்பட வேண்டும்.
- பள்ளி வளாகத்தில் அல்லது விடுதி வளாகத்தில் எந்த ஒரு மாணவரும் மரணமடைவாரானால், அல்லது எந்த ஒரு மாணவரும் தற்கொலை செய்துகொள்வாரானால் அது சந்தேகத்திற்குரிய மரணமாக கருதப்பட வேண்டும். அதற்கேற்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்கொலைக்குத் தூண்டிய காரணத்திற்காக சட்டப்படி நிர்வாகத்தினர் மீது வழக்கு தொடரப்பட வேண்டும்.
- பள்ளிகளிலும் விடுதிகளிலும் நடைபெறும் மனித உரிமை மீறல் பிரச்சனைகளைக் கையாள்வதற்காக ஒரு சிறப்புப் பிரிவை NCPCR, NHRC, SHRC, மகளிர் ஆணையம் போன்ற சட்டப்பூர்வ ஆணையங்கள் ஏற்படுத்த வேண்டும்.
- விடுதிகளில் சந்தேகத்திற்குரிய சூழல்களில் மாணவர்கள் உயிரிழக்கக்கூடிய ஒவ்வொரு நிகழ்வுக்கும், அனைத்து விதமான கொடுமையான நடவடிக்கைகளுக்கும், அவமதிக்கும் வகையில் நடத்தப்படுவதற்கும் சமூக நலத்துறை பொறுப்பேற்க வேண்டும்.
- சுயநிதிப் பள்ளிகள் (தனியார்) உள்பட அனைத்துப் பள்ளிகளிலும் நிகழக்கூடிய மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை பள்ளிக் கல்வித்துறை மேற்கொள்ள வேண்டும். மனித உரிமைத் தரங்களை மீறுகிற நிர்வாகங்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- பள்ளிகளில் உரிமைகள் மீறப்படுவதை கண்காணிக்கவும் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் வழக்கறிஞர்கள், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் பெற்றோர் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் கொண்ட மனித உரிமைகள் பாதுகாப்பு பள்ளிக் குழு ஒன்றை அரசாங்கம் உடனடியாக அமைக்க வேண்டும்.

## சிறுமிக்கு சூடு போட்ட அங்கன்வாடி உதவியாளர் கைது

நெல்லை மாவட்டம் கடையம் அருகேயுள்ள மீனாட்சிபுரத்தைச் சேர்ந்தவர் வேல்முருகன். இவரது மகள் வெண்ணிலா (5). கடந்த 30ம் தேதி அங்கன்வாடி மையத்திற்கு சென்ற வெண்ணிலா மதியம் அங்கு தூங்கினாள். அங்கன்வாடியில் பணிபுரியும் உதவியாளர் சீதாலெட்சுமி, சிறுமியை எழுப்ப முயன்றார். ஆனால் நீண்ட நேரமாகியும் சிறுமி எழுந்திருக்காததால் ஆத்திரமடைந்த அவர் அடுப்பில் கத்தியை சூடாக்கி வெண்ணிலாவின் காலில் சூடு போட்டார். இதில் சிறுமிக்கு காயம் ஏற்பட்டது. வலி தாங்காமல் அழுதபடி வீட்டுக்கு சென்ற சிறுமி தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து பெற்றோரிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து வேல்முருகன் கடையம் போலீசில் புகார் செய்தார். எஸ்பி உத்தரவின்பேரில் அங்கன்வாடி உதவியார் சீதாலெட்சுமியை போலீசார் கைது செய்தனர். இதனிடையே சீதாலெட்சுமியை சஸ்பெண்ட் செய்து கலெக்டர் கருணாகரன் உத்தரவிட்டார்.

**ஆதாரம்: தினகரன், 6 ஜுன் 2014**

# அதிகரிக்கும் குழந்தைத் திருமணங்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?: வழக்கு பதிவு செய்ய தயங்கும் காவல்துறை

– இ. மணிகண்டன்



Source: News.com.au, March18, 2014

விருதுநகர் மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 44 குழந்தைத் திருமணங் களும், இந்த ஆண்டில் இதுவரை 37 குழந்தைத் திருமணங்களும் நடந்துள்ளன. ஆனாலும், உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதி களின் தலையீட்டால், குழந்தைத் திருமணம் நடத்துவோர் மீது வழக்கு பதிவுசெய்து நடவடிக்கை எடுக்க காவல்துறை தயங்குவதாக புகார் எழுந்துள்ளது. ஆண்டுதோறும் குழந்தைகள் தினத்தை உற்சாகமாகக் கொண் டாடுகிறோம். ஆனால், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளும் அடக்கு முறைகளும் ஒருபுறம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக மலைவாழ் சமூகத்தினரிடமும் கிராமப் புறங்களிலும் குழந்தைத் திருமணங்கள் இன்ன மும் முழுமையாகத் தடுக்கப்பட வில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் கடந்த 29 மற்றும் 30–ம் தேதிகளில் மட்டும் 8 இடங்களில் குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளன.

அதைத் தெடர்ந்து வெள்ளிக்கிழமை 3 இடங்களில் குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. பெண்ணுக்கு 18 வயது, ஆணுக்கு 21 வயது நிறைவடையாத நிலையில் செய்யப்படும் திருமணம் குழந்தைத் திருமணமாகக் கருதப்படும். சமூகத்திலும், குடும்பத்திலும் பெண்களுக்கு உரிய இடம் அளிக்காதது, வரதட்சணை, குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் உடல் மற்றும் மன ரீதியான பிரச்சினைகள் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமை, போதிய கல்வி அறிவின்மை, வறுமை, பாலியல் ரீதியான விஷயங்கள் குறித்த புரிதல் இல்லாமை, குடும்பத்தில் பெண் குழந்தைகளை சுமையாகக் கருதுவது, பாலின விகிதம் சமம் இல்லாத நிலைமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் குழந்தைத் திருமணங்கள் நடக்கின்றன. குழந்தைத் திருமணம் செய்துவைக்கப்படும் பெண்கள் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். குழந்தைத் திருமணங்களை தடுத்து நிறுத்த மாவட்ட ஆட்சியர், மாவட்ட நீதிபதி, குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர், சமூக நலத்துறை அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், காவல்துறை, குழந்தைகள் நலக்குழு, சைல்டு லைன் (1098) ஆகியோருக்குத் தெரிவிக்கலாம். இதுகுறித்து சமூக நலத்துறை அலுவலர்கள் மற்றும் போலீஸார் கூறும்போது, குழந்தைத் திருமணம் நடப்பதை அறிந்து அங்கு சென்று திருமணத்தை தடுத்து நிறுத்தியவுடன், சம்பந்தப்பட்டவர்கள் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கும், அரசியல் பிரமுகர்களுக்கும் தகவல் தெரிவித்துவிடுகின்றனர். இதனால், அவர்கள் தங்களை தெடர்புகெண்டு வழக்கு பதிவு செய்ய வேண்டாம் என்றும், எழுதி வாங்கிக்கெண்டு விட்டுவிடுங்கள் என நிர்பந்தம் செய்வதாகவும் புகார் கூறப்படுகிறது.

குழந்தைத் திருமணங்களை தடுத்து நிறுத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டரீதியான மற்றும் வழக்கு பதிவு செய்து, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படாததும் நாளுக்கு நாள் குழந்தைத் திருமணங்கள் அதிகரித்து வருவதற்கு ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. என்ன தண்டனை ? குழந்தைத் திருமணம் செய்துவைப்போருக்கு குழந்தை திருமண தடுப்புச் சட்டம் 2006–ன் படி 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அல்லது ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும். அல்லது இவை இரண்டும் விதிக்கப்படும். குழந்தைத் திருமணம் செய்துகெள்பவரும் குற்றவாளியாகவே கருதப்படுவார். திருமணத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள், தூண்டியவர்கள், நெறிப்படுத்தியவர்கள், நடத்தியவர்கள் அனைவரும் குற்றவாளிகள்தான் என குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: தி இந்து, ஜூலை 3, 2014

# போக்கோ ஹராம் மீது ஒரு போர்

– ஜான் செரியன்

***பயங்கரவாதத்திற்கு எதிராக வெற்றிகரமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நைஜீரிய ராணுவத்தால் முடியுமா என்று அமெரிக்கா சந்தேகிக்கிறது. இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு நைஜீரிய எல்லைக்கு அப்பாலும் அச்சுறுத்தலாக இருக்கிறது என்று பிரான்ஸ் அஞ்சுகிறது. இந்தப் பின்னணியில், போக்கோஹராம் அமைப்புடன் மோதுவதற்காகவும், கடத்தப்பட்ட பள்ளிக் குழந்தைகளை மீட்பதற்காகவும் தலையிடுவது என்று மேற்குலகம் முடிவு செய்கிறது***

நைஜீரிய இஸ்லாமிய அமைப்பாகிய போக்கோ ஹராம் கடத்திச் சென்ற சுமார் 200 பள்ளிக் குழந்தைகளின் கதி என்ன என்பது குறித்து சர்வதேச சமுதாயம் விழித்துக்கொண்டு யோசிப்பதற்கு ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. அமெரிக்காவின் முதல் பெண்மணி மைக்கேல் ஒபாமா காட்சி ஊடகங்களில் முன்னணியில் உள்ள நட்சத்திரங்கள் ஆகியோர், கடத்தப்பட்ட அந்த பெண் குழந்தைகளை விடுவிக்குமாறு கோரும் அட்டைகளோடு நிற்கும் படங்கள் வெளியானதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் பொது மக்களின் சிந்தனை உசுப்பிவிடப்பட்டது. ஏப்ரல் மாதம் இந்தச் சம்பவம் நடந்ததைத் தொடர்ந்து விரைவிலேயே நைஜீரியாவில் “எங்கள் பெண் குழந்தைகளை திரும்பக் கொண்டு வாருங்கள்” என்ற பரப்புரை இயக்கம் தொடங்கியது. அந்தக் குழந்தைகளை மீட்பதிலும் சரி, அந்த நாட்டின் வடகிழக்குப் பகுதியில் மேற்கொண்டு போக்கோ ஹராம் நடவடிக்கைகள் பரவுவதை தடுப்பதிலும் சரி, நைஜீரிய ராணுவம் பரிதாபகரமாக தோல்வியடைந்துள்ளது. மே மாதம் 2வது வாரத்தில், தலைநகரமான அபூஜா நகரில் ஒரு கார் வெடிகுண்டு தாக்குதலை அந்த அமைப்பு நடத்தியது. அதில் பத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு வடபகுதியைச் சேர்ந்த கானோ நகரில் உள்ள கிறிஸ்தவர்கள் குடியிருப்பில் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒரு நபர் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியதில் 10க்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்தே போக்கோ ஹராம் தாக்குதல்களில் 1500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுவிட்டனர். நைஜீய பாதுகாப்புப் படையினர். மிக கடுமையான முறையில் எதிர்வினையாற்றி, போக்கோ ஹராம் ஆதரவாளர்கள் என்று சந்தேகித்த குடிமக்களை சுட்டுக்கொன்றனர்.

நிலைமையை சரியாகக் கையாளவில்லை என்ற கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ள அதிபர், குட்லக் ஜோனதன், இஸ்லாமிய அடிப்படைவாதிகளை எதிர்கொள்ள ஆப்பிரிக்கா அல்லாத நாடுகளின் உதவியைக் கோரியுள்ளார். அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், இஸ்ரேல், சீனா ஆகிய நாடுகள் தங்களது ஆலோசகர்களை அபூஜாவுக்கு அனுப்பியுள்ளன. இதற்கு எதிர்வினையாக கேமரூன் எல்லைப் பகுதியையொட்டி உள்ள ஒரு சீனத் தொழிற்சாலையை போக்கோ ஹராம் தாக்கியுள்ளது. அதில் சீனாவைச் சேர்ந்த இரண்டு பேர் கொல்லப்பட்டனர். மே மாதம் மூன்றாவது வாரத்தில், பலர் அங்கிருந்து கடத்தப்பட்டுள்ளனர். எத்தனை பேர் கடத்தப்பட்டனர் என்பது தெரியவில்லை. கடத்தப்பட்ட பெண் குழந்தைகள் எங்கே இருக்கிறார்கள் என்பதை கண்டுபிடிக்கவும், இஸ்லாமிய தீவிரவாத குழுவின் நடமாட்டத்தை கண்காணிக்கவும் அமெரிக்கா ஏற்கெனவே தனது ஆளில்லா விமானங்களையும், கண்காணிப்பு விமானங்களையும் ஈடுபடுத்தியுள்ளது. உள்நாட்டுக் கலவரங்களை சமாளிப்பது குறித்து நைஜீரிய ராணுவத்திற்கு அமெரிக்க ராணுவ ஆலோசகர்கள் ஆலோசனை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

போக்கோஹராம் தாக்குதல்கள் அண்மையில் இவ்வாறு அதிகரிப்பதற்கு முன்பாகவே கூட, நைஜீரிய அரசுடன் ஒத்துழைத்த அமெரிக்கா, பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஏதுவாக நைஜீரியாவின் அண்டை நாட்டில் தனது ஆளில்லா விமானங்களை நிறுத்தி வைத்தது. இந்த மேற்கு ஆப்பிரிக்க நாட்டில் ஆளில்லா விமானங்கள், பராமரிப்பு குழுக்கள் ஆகியவற்றோடு சுமார் 300 ராணுவத்தினரை நிறுத்துவதற்கான உடன்பாட்டை நைஜீரிய அரசுடன் அமெரிக்கா 2013ல் செய்துகொண்டது.

நைஜீரிய ராணுவத்தால் தனது சொந்த பலத்தில் அந்தப் பெண் குழந்தைகளை மீட்க இயலாது என்ற முடிவுக்கு பாரக் ஒபாமா அரசு வந்துள்ளதாக அமெரிக்க ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆப்பிரிக்க விவகாரங்களுக்கான பெண்டகன் முதன்மை இயக்குநர் அலைஸ் ஃபிரண்ட், அமெரிக்க நாடாளுமன்ற குழு முன்பாக இதுகுறித்து பேசுகையில், “நைஜீரியாவின் இதர துறைகள் ஒவ்வொன்றிலும் இருப்பதைப் போலவே ராணுவத்திலும் ஊழல் பிரச்சனை கடுமையான சவாலாக இருக்கிறது,” என்று கூறியுள்ளார். கடத்தப்பட்ட பெண்

குழந்தைகள் எங்கே இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான "நடவடிக்கைக்கு ஏற்ற ஆதாரங்களுடன்" நைஜீரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டால் கூட, அந்தக் குழந்தைகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை நைஜீரிய ராணுவத்தால் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே என்று அலைஸ் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

மே மாதம் 2வது வாரத்தில் வடகிழக்கில் உள்ள போர்னோ மாநிலத்தின் தலைநகர் மாய்டுகுரி நகரில் நிறுத்தப்பட்டிருந்த ராணுவத்தினர் தங்களது படைப் பிரிவு தலைமை அதிகாரி மீது துப்பாக்கி சூடு நடத்தினர். போக்கோ ஹராம் முனைப்புடன் செயல்படும் பகுதி இது. அதன் தாக்குதல்களில் தங்களது சகாக்கள் பலர் உயிரிழக்க நேரிட்டதற்கு அந்த அதிகாரிதான் காரணம் என்று குற்றம்சாட்டி ராணுவத்தினர் அவரைத் தாக்கினர். உலகம் முழுவதுமே அமெரிக்கா ராணுவ ரீதியாக தலையிட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிற, ஜான் மெக்கெய்ன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெண் குழந்தைகளை மீட்பதற்கு அமெரிக்க ராணுவத்தினரை நைஜீரியாவில் நிறுத்த வேண்டும் என்று ஒபாமா அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

மே முதல் வாரத்தில் போக்கோ ஹராம் ஒரு வீடியோ படத்தை வெளியிட்டது. அதிலேதான் அந்த சிறுமிகளை கடைசியாக பார்க்க முடிந்திருக்கிறது. உடல் முழுக்க மறைக்கும் அங்கிகளை அணிந்திருந்த அந்த சிறுமிகள் குரான் வரிகளை உச்சரித்துக்கொண்டிருந்தனர். அதற்கு முன் வெளியிடப்பட்ட மற்றொரு வீடியோ ஒளிப்பதிவில் போக்கோ ஹராம் தலைவர் அபுபக்கர் ஷெகாவ் பொதுவாக மேற்கத்திய கல்வி முறைக்கு எதிராகவும், குறிப்பாக பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு எதிராகவும் ஆவேசத்துடன் பேசினார். நைஜீரிய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான போக்கோ ஹராம் ஆட்களை விடுதலை செய்யாவிட்டால், கடத்தப்பட்ட சிறுமிகள் கட்டாயமாக திருமணம் செய்து வைக்கப்படுவார்கள் என்று அவர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். அசாதாரணமான மனிதராக சித்தரிக்கப்படும் ஷெகாவ் இறந்துவிட்டார் என்று இதுவரை 3 முறை நைஜீரிய அரசால் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அவர் ஒவ்வொரு பயங்கரவாத செயலும் நடத்தப்பட்ட பிறகு இப்படி வீடியோ படங்களில் தோன்றி நைஜீரிய அரசை கேலி செய்துகொண்டுதான் இருக்கிறார். இப்போது நைஜீரிய அரசுக்கு உதவுவதற்காக அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் பாதுகாப்புப் படையினரும் தலையிட்டுள்ளனர்.

மே 17 அன்று பாரீஸ் நகரில் பிரெஞ்சு அதிபர் ஃபிராங்காய்ஸ் ஹோலண்டே ஏற்பாடு செய்திருந்த ஆப்பிரிக்க பாதுகாப்புத் தொடர்பான ஒரு அவசர உச்சி மாநாட்டில் கலந்துகொண்டிருந்த ஜோனதன், கடத்தப்பட்ட சிறுமிகளை விடுவிப்பதற்கு சிறையில் உள்ள போக்கோ ஹராம் ஆட்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். இந்தப் பிரச்சனையில் தாம் போக்கோ ஹராம் அமைப்புடன் பேசுவதற்குத் தயாராக இல்லை என்றும் அவர் அறிவித்தார். பெண் குழந்தைகளை மீட்பதற்கான விலையாக போக்கோ ஹராம் ஆட்களை விடுவிக்க வேண்டும் அல்லது பிணைத் தொகை அளிக்க வேண்டும் என்பதை அமெரிக்காவும் ஏற்கவில்லை என்று பாரக் ஒபாமா அரசு அறிவித்தது. அதே நேரத்தில், போக்கோ ஹராம் பிடியிலிருந்து அந்தப் பெண் குழந்தைகளை மீட்பது மிகக் கடுமையான பணியாக இருக்கும் என்று மேற்கத்திய ராணுவ வல்லுநர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அந்த வட்டாரம் மற்ற இடங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்திருப்பதும் அங்கு கடுமையான நிலைமைகள் இருப்பதுமே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இந்நேரம் அந்த சிறுமிகள் தனித்தனி குழுக்களாக பிரிக்கப்பட்டிருப்பார்கள். இதனால், அவர்களை மீட்கும் பணி மேலும் அபாயகரமானதாக மாறியுள்ளது.

## அமெரிக்க தடங்கள் – பிரான்ஸ் எச்சரிக்கை

பாரீஸ் நகரில் நடந்த உச்சி மாநாட்டில் சாட், நைஜர், காமரூன், பெனின் ஆகிய நாடுகளின் அதிபர்களும் கலந்துகொண்டனர். பிரெஞ்சு மொழி புழக்கத்தில் உள்ள இந்த மேற்கு ஆப்பிரிக்க நாடுகள், விடுதலை அடைந்ததிலிருந்து பிரான்சின் செல்வாக்கில் இருந்து வருகின்றன. நைஜீரியாவின் அண்டை நாடுகளுடனான இந்த உச்சி மாநாட்டை பாரீஸ் நகரில் நடத்துமாறு கேட்டுக்கொண்டதே ஜொனாதன்தான் என்று பிரெஞ்சு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சஹாரா பாலைவனம் சார்ந்த ஆப்ரிக்க நாடுகள் தனது செல்வாக்கின் கீழ் இருக்க வேண்டும் என்று நெடுங்காலமாகவே பிரான்ஸ் கருதி வருகிறது. இந்த கண்டத்தில் அமெரிக்காவின் தன்னிச்சையான ராணுவத் தடங்கள் அதிகரிப்பது குறித்து பிரான்ஸ் எச்சரிப்புடனேயே இருந்து வருகிறது. அதே நேரத்தில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் அது அமெரிக்காவுடன் ஒத்துழைத்தும் வருகிறது.

காமரூன், நைஜர், சாட் ஆகிய நாடுகள் நைஜீரியாவுடன் ஒரு பொது எல்லையைக் கொண்டுள்ளன. எல்லைப் பகுதிகளில் உள்ள இண்டு இடுக்குகளை போக்கோ ஹராம் தனக்கு சாதகமாக பயன்படுத்தி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் போக்கோ ஹராமின் பயங்கரவாத தாக்குதல்களுக்கு ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகிவிட்டனர். போக்கோ ஹராம் தன்னை மீண்டும் மீண்டும் தன்னை அணிதிரட்டிக்கொள்வதற்காகவும் புதுப்பித்துக்கொள்வதற்காகவும், தன்னை விரட்டுகிற ராணுவத்திடமிருந்து தப்பிப்பதற்காகவும் காமரூன்

வடக்கு எல்லைப் பகுதிகளை தன்னுடைய தளமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறது என்று நைஜீரியா குற்றம்சாட்டி வந்துள்ளது. ஆனால், போக்கோ ஹராம் நடவடிக்கைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து, காமரூன் எல்லையையொட்டிய மத்திய ஆப்பிரிக்கக் குடியரசில் ரத்தக் களறி ஏற்பட்டதைத் தொடர்ந்தும் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் அதிகமான அகதிகள் வந்துள்ளனர். நைஜீரியாவுடன் காமரூனுக்கு எல்லைப் பிரச்சனைகளும் உள்ளன. அதனால், அந்த இரு நாடுகளின் இருதரப்பு உறவுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. ஆனால், பயங்கரவாதிகளை எதிர்கொள்வதில் நைஜீரியாவுடன் ஒத்துழைப்பது என்று காமரூன் முடிவு செய்துள்ளது. அதன் பின்னணியில் பிரான்சின் நிர்ப்பந்தம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நைஜர் நாட்டில் உள்ள பல யுரேனியம் சுரங்கங்கள் பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அந்தச் சுரங்கங்களின் பாதுகாப்புக் குறித்தும் பிரான்சுக்கு கவலை ஏற்பட்டுள்ளது. நைஜர் ராணுவத்திற்கும், போக்கோ ஹராமுடன் தொடர்புள்ள தீவிரவாதிகளுக்குமிடையே இந்த ஆண்டு தொடக்கத்தில் மோதல்கள் நடந்துள்ளன. 2013ல் மாலி நாட்டில் இஸ்லாமிய அமைப்புகளின் செயல்பாடு அதிகரித்தது. அது நைஜர் நாட்டுக்கும் பரவக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நைஜர் நாட்டில் துவாரேக் பிரிவைச் சேர்ந்த மக்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். மாலியில் பிரெஞ்சு ராணுவம் தலையிட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டின் மத்திய அரசைக் கவிழ்ப்பதற்கு, வடபகுதியில் இஸ்லாமியவாதிகள் மேற்கொண்ட முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது. எனினும், மூன்று ஆண்டுகளுக்கு முன் லிபியா நாட்டில் பிரெஞ்சு அரசின் ஏற்பாட்டில் 'நாட்டோ' (வடக்கு அட்லான்டிக் உடன்பாட்டு அமைப்பு) தலையிட்டதைத் தொடர்ந்தே இந்த வட்டாரத்தில் இஸ்லாமிய தீவிரவாதம் ஊக்கம் பெற்றது. லிபியா தலைவர் முவாம்மர் கடாபி அமைத்திருந்த ஆயுதக்கிடங்குகளிலிருந்து கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்கள் தெற்கே நைஜீரியாவையும், வடக்கே காஜா ஸ்ட்ரிப் பகுதியையும் சென்றடைந்தன. மேற்கத்திய ராணுவ தலையிட்டுக்குப் பிறகு லிபியாவில் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்திட்ட துயரங்களும், அராஜகங்களும், அந்த நாட்டில் வலுப்பெற்றுள்ள இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளும் போக்கோ ஹராம் போன்ற அமைப்புகளுக்கு நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளித்துள்ளன.

ஆனால், தனது முன்னாள் காலனி நாடுகளை பாதுகாக்கிற கடமை தனக்கு இருப்பதாக பிரான்ஸ் கருதுகிறது. மாலி, நைஜர், சாட் உள்ளிட்ட தனது முன்னாள் ஆப்பிரிக்க காலனி நாடுகள் பலவற்றில் பிரான்சின் ராணுவம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த நாடுகளின் அதிபர்கள் பிரான்சின் ஆதரவில் அரசியல் செல்வாக்குப் பெற்றவர்கள்தான். பாரீஸ் நகரில் அண்மையில் நடந்த உச்சி மாநாட்டிற்குப் பிறகு, மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் பயங்கரவாதத்தை எதிர்கொள்ள இடைக்கால ஏற்பாடாகவும் நீண்டகாலத் திட்டமாகவும் ''பொதுவான, வட்டாரம் சார்ந்த செயல் திட்டம்'' ஒன்றைப் பின்பற்ற 6 நாடுகளும் முடிவு செய்துள்ளன என்று ஹோலண்டே அறிவித்தார்.

சம்பந்தப்பட்ட 6 நாடுகளிடையே ''உளவுத்துறை ஒருங்கிணைப்பு, தகவல் பகிர்வு, மையப்படுத்தப்பட்ட வழிமுறைகள், எல்லைக் கண்காணிப்பு'' ஆகிய ஏற்பாடுகள் இருக்கும் என்றார் அவர். பயங்கரவாதக் குழுக்களால் அந்த வட்டாரத்திற்கு மட்டுமல்லாமல் ஐரோப்பாவுக்கே கூட ஆபத்துதான் என்று ஹோலண்டே கூறினார். அவர் கூறியதை அங்கீகரித்த ஜோனதன், பயங்கரவாத பிரச்சனையை சமாளிக்க ''வட்டார அணுகுமுறை'' மட்டுமே உதவியாக இருக்கும் என்றார். ''மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் இணைந்து செயல்படாமல் பயங்கரவாதிகளை நம்மால் முறியடிக்க முடியாது என்றார் அவர். பாரீஸ் கூட்டத்தில் முக்கிய மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே மிக அதிக மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.) உள்ள நாடு நைஜீரியா. ஆப்பிரிக்க ஒன்றியத்தின் (ஏ.யு.) ஒரு முன்னணி உறுப்பினராகவும் நைஜீரியா இருக்கிறது. ஆனால், இப்போது உள்நாட்டுக் கலவரத்தை கையாளுவதில் வெளிநாட்டு ராணுவ உதவிகளை நாடும் நிலைமை அந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. லைபீரியா, சியேரா லியோன் ஆகிய நாடுகளுக்கு மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் சமூகம் என்ற அமைப்பின் படையினர் உள்பட பல அமைதிப்படைகளை அனுப்புவதில் நைஜீரியா முன்னிலை வகித்து வந்துள்ளது. ஆப்பிரிக்க மண்ணில் ஐரோப்பிய படைகளும் அமெரிக்கப் படைகளும் நிறுத்தப்படுவது குறித்து சில ஆண்டுகள் முன் வரையில் கூட ஏ.யு. அமைப்பு மாற்றுக் கருத்து தெரிவித்து வந்துள்ளது. ஆப்பிரிக்க கண்டத்தில் அமைதிப்படைகளையும், உள்நாட்டு கலவர தடுப்புப் படைகளையும் ஆப்பிரிக்க நாடுகளேதான் கையாண்டு வந்துள்ளன. அமெரிக்க அதிபராக இருந்த ஜார்ஜ்புஷ் தனது பதவிக் காலத்தின் கடைசி நாட்களில் அமெரிக்க – ஆப்பிரிக்க கட்டளை அமைப்பை (ஆப்ரிகாம்) ஏற்படுத்தினார். அந்த அமைப்பு இப்போது ஆப்பிரிக்க கண்டத்தில் நிரந்தரமாக தனது படைகளை நிறுத்துவதற்கு வழி தேடிக்கொண்டிருக்கிறது. ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் நகரில் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ள ஆப்ரிகாம் அமைப்பு, ஆப்பிரிக்க வட்டாரத்தின் கொம்பு போன்ற பகுதியில் உள்ள டிஜிபோட்டி என்ற சின்னஞ்சிறு நாட்டில் தனது சிறிய ராணுவத் தளம் ஒன்றை அமைத்துள்ளது. ஆப்ரிகாம் அமைப்பில் குடிமைச் சமூகம் சார்ந்த ஏற்பாடும்




உள்ளது. அதன் மூலம் "தேவைப்படுகிற" ஆப்பிரிக்க நாடுகளுக்கு "மனித நேய" உதவிகளும் "சிறந்த நிர்வாக" உதவிகளும் வழங்கப்படுகின்றன. (பல ஆப்பிரிக்க நாடுகளில் "ஜனநாயகம்" மற்றும் "சிறந்த நிர்வாகம்" ஆகியவற்றை பரப்புவதில் அமெரிக்க அமைப்புகளுடன் இந்தியா முனைப்போடு கூட்டுச் சேர்ந்து செயல்பட்டு வருகிறது.)

## ஊக்கம் பெறும் அமெரிக்க முக்கியத்துவம்

ஆனால், நைஜீரியா போன்ற நாடுகள் ஆப்ரிகாம் அமைப்பிற்கு ஒரு ராணுவ முக்கியத்துவம் வழங்க தயாராக உள்ள நிலையில், அதற்கு இணையாக அமெரிக்காவும் ஒரு மைய முக்கியத்துவம் பெறுவது என்பது பெறும் ஊக்கம் பெற்றுள்ளது. ஆப்பிரிக்க கண்டத்தில் ஆப்ரிகாம் அமைப்பு 18 முன்னிலைச் செயல்பாட்டுத் தளங்களை அமைத்துள்ளது. அமெரிக்க படைகள் ஏற்கெனவே எத்தியோபியா, கென்யா, உகாண்டா உள்ளிட்ட நாடுகளின் ராணுவங்களுக்கு ஆலோசனை கூறி வருகிறது. 1990களின் தொடக்கத்தில் சோமாலியா நாட்டில் ராணுவ தலையீடு தோல்வியடைந்தது. அதன் பிறகு, இப்போது அமெரிக்கா தனது மிகப்பெரிய ராணுவப் பிரிவை அந்தக் கண்டத்தில் நிறுத்தியுள்ளது. அமெரிக்க நாடாளுமன்றத்தின் முன் வாக்குமூலம் அளித்த ஆப்ரிகாம் படைத் தலைவர் ஜெனரல் டேவிட் ரோட்ரிக்ஸ், ஆப்பிரிக்காவில் அமெரிக்க ராணுவம் தலையிட்டிருப்பதற்கு முக்கிய காரணம் அங்கு மிகப்பெரிய அளவிற்கு ஹைட்ரோ கார்பன் இருப்பதும், வளமான கணிமப் படிமங்கள் இருப்பதும்தான் என்று கூறினார். அந்த வளங்கள் இன்னும் பயன்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

"கூட்டாளிகளோடும், சீனா, இந்தியா, பிரேசில் போன்ற புதிய ஆதிக்க சக்திகளோடும் ஆப்பிரிக்காவுக்குள்ள முக்கியத்துவம் அதிகரித்து வரும் நிலையில், ஆப்பிரிக்கக் கண்டத்துடனான நமது ஈடுபாட்டின் மூலமாக இதர பகுதிகளில் அமெரிக்க பாதுகாப்பு நோக்கங்களை வலுப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது," என்று அமெரிக்க நாடாளுமன்றக் குழுவிடம் ஜெனரல் ரோட்ரிக்ஸ் சென்ற ஆண்டு கூறினார். ஆப்ரிகாம் அமைப்பு ஏற்படுத்தப்பட்ட 2008ம் ஆண்டில் ஆப்ரிக்க கண்டத்தில் அமெரிக்க ராணுவம் 172 "நடவடிக்கைகளை" மேற்கொண்டது. அதைத் தொடர்ந்து இதுவரையில் 546 ராணுவ நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது என்றும் அவர் நாடாளுமன்றக் குழுவிடம் கூறினார். நடவடிக்கை என்பதில் பல்வேறு நாடுகளின் ஆயுதப்படைகளுக்குப் பயிற்சி அளிப்பது முதல், சோமாலியா, உகாண்டா போன்ற பல நாடுகளில் "சிறப்பு நடவடிக்கைகள்" மேற்கொள்வது வரையில் அடங்கும்.

சோமாலியாவில் உள்ள தீவிரவாத இயக்கமாகிய அல் ஷபாப் என்ற அமைப்புடன் அமெரிக்கப் படைகள் மோதிக்கொண்டிருக்கின்றன. உகாண்டாவிலும் அதன் அண்டை நாடுகளிலும் செயல்பட்டு வரும் லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மி (எல்.ஆர்.ஏ.) என்ற கொரிலா அமைப்பின் தலைவர் ஜோசப் கோனி–யை வேட்டையாடிக்கொண்டிருக்கிறது. தலைமறைவாகச் செயல்படும் எல்.ஆர்.ஏ. தலைவரைப் பிடிப்பதில் அமெரிக்க சிறப்புப் படைகள் வெற்றிபெற முடியவில்லை. எல்.ஆர்.ஏ. அமைப்பாலும், கோனி–யாலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளின் வீடியோ

பதிவாகிய "கோனி 2012" என்ற தொகுப்பு சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்க சமூக ஊடகங்களில் பெரும் கூச்சல் எழுந்தது. கோனியைப் பிடிப்பதற்கு அமெரிக்கப் படைகளை உகாண்டாவுக்கு அனுப்ப வேண்டும் என்று ஒபாமா அரசை வலியுறுத்தும் ஆரவாரமான பிரச்சார இயக்கத்தில் ஹாலிவுட் நட்சத்திரங்களும் மற்றவர்களும் இணைந்துகொண்டார்கள். எல்.ஆர்.ஏ. அமைப்பு குடிமக்களுக்கு எதிரான தனது கொடூரங்களுக்காகவும், குழந்தைகளை தனது படைகளில் பயன்படுத்துவதற்காகவும் உலகம் தழுவிய அளவில் மோசமான பெயரை எடுத்துள்ளது.

இயற்கை வளங்கள் சீனா போன்ற நாடுகளுக்குச் செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கான வியூக முக்கியத்துவம் வாய்ந்த கட்டுப்பாடு தன்னிடம் வரவேண்டும் என்பதற்காக ஆப்பிரிக்காவில் நடைபெறும் பயங்கரவாத எதிர்ப்பு பிரச்சார இயக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ள அமெரிக்கா விரும்புகிறது. சீனாவின் எண்ணை இறக்குமதியில் மூன்றில் ஒரு பங்கு ஆப்பிரிக்காவிலிருந்துதான் செல்கிறது. ஆப்பிரிக்க கண்டத்தின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாகவும் மிகப்பெரிய முதலீட்டாளராகவும் சீனா உருவாகி வருகிறது. மே 7–9 தேதிகளில் அபூஜா நகரில் நடைபெற்ற ஆப்பிரிக்காவுக்கான உலகப் பொருளாதார அமைப்பின் 24வது மாநாட்டில், சீன பிரதமர் லீ கீகியாங் கலந்துகொண்டார். நைஜீரியாவின் ரயில்வே துறையை மேம்படுத்த சீனா 1300 கோடி டாலர் முதலீடு செய்யும் என்று லீ கீகியாங் அறிவித்தார். கடத்தப்பட்ட பள்ளி மாணவிகளை மீட்பதற்கு சீனா உதவும் என்றும் சீன பிரதமர் அறிவித்திருக்கிறார்.

**ஆதாரம்: 'ஃபிரண்ட் லைன்' ஜூன் 13, 2014**

## பாலியல் வன்கொடுமைக்கு ஆளான சிறுமிகள்: அதிகாரிகளை குற்றம்சாட்டும் சமூக ஆர்வலர்கள்

பொள்ளாச்சியில் உள்ள டி.இ.எல்.சி தேவாலய நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் தனியார் விடுதி ஒன்றில் இரண்டு சிறுமிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட விவகாரம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்குக் காரணம் அதிகாரிகளின் அலட்சியமே என்று குற்றம் சாட்டுகின்றனர் சமூக ஆர்வலர்கள்.

கோவை கணபதியில் சமீபத்தில் தனியார் விடுதி ஒன்றில் மாணவர் ஒருவரின் உயிரிழப்பைத் தொடர்ந்து தனியார் விடுதிகளை முறையாகக் கண்காணிக்க உள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்தது. ஆனால் அதன் தொடர்ச்சியாக தற்போது பொள்ளாச்சியில் இரண்டு சிறுமிகள் வலுக்கட்டாயமாக விடுதியில் இருந்து தூக்கிச் செல்லப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். விடுதி இயங்கும் போது ஆய்வு செய்ய வேண்டிய அதிகாரிகள், விபத்து முடிந்த பிறகு ஆய்வு செய்து, வசதிகள் இல்லை என்று விடுதியை மூட உத்தரவிடுவது அவர்கள் மீதான தவறை மறைக்க முயற்சிப்பதையே காட்டுகிறது. முறைகேடாக விடுதியை நடத்தியவர்களின் மேல் நடவடிக்கை என்றால், ஆய்வே நடத்தாமல், இப்படி ஒரு விடுதி இருப்பது கூட தெரியாமல் இருக்கும் அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை என்பதும் கேள்வியாக உள்ளது.

சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பொள்ளாச்சியின் மையப் பகுதியில், பாழடைந்த கட்டிடங்களுக்கு நடுவே பாதுகாப்பே இல்லாத நிலையில் இயங்கி வரும் விடுதிக்கு அங்கீகாரம் பெறவில்லை என்பது விபத்து நடந்த பிறகே தெரியவந்துள்ளது. ஆனால் விபத்துக்கள் நடைபெற வாய்ப்புள்ளது, காப்பாளர்கள் சரிவர செயல்படுவதில்லை என பல குற்றச்சாட்டுக்களை வைத்து மார்ச் 17ம் தேதி மாவட்ட நிர்வாகத்திற்கும், சமூக நலத்துறைக்கும் மனு கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு அனைத்துக் கட்சி சார்பிலும் இந்த கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் யாரும் இதுகுறித்து விசாரணை நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

முன்புறமுள்ள பழுதடைந்த கட்டிடங்கள் சமூக விரோதச் செயல்களுக்கு ஏற்ற இடமாகிவிட்டது. இந்த விடுதிக்கு என்று தனியே கேட் கூட இல்லை. மாணவ, மாணவிகளுக்கு கழிப்பறை, குளியலறை சரியாக இல்லை. திறந்த வெளி கழிப்பிடத்திற்கு அருகே சமையலறை உள்ளது. விடுதிக்கு நிரந்தரமான ஒரு காவலாளி இல்லை. அருகே உள்ள விடுதி காப்பாளர்களின் வீடுகள் சிறப்பான முறையில் கட்டப்பட்டு சகல வசதிகளுடன் பராமரிக்கப்படுகிறது. ஆனால் அதனை ஒட்டியுள்ள விடுதி, பாழடைந்த மண்டபமாக உள்ளது என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

**ஆதாரம்: தி இந்து, ஜூன் 13, 2014**

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**
*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsfoundation.org.in*